விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 45 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 05 செவ்வாய்க்கிழமை (21.08.2012) | பக்கங்கள்: பதினாறு

## மீள்குடியேற்ற நிலவரம் குறித்து யாழ்ப்பாணத்தில் அமெரிக்க குழு ஆராய்வு

அமெரிக்கத் தூதுவராலய அதிகாரிகளுக்கும் யாழ். மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்திற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் அமெரிக்கத் தூதுவராலய அரசியல் பிரிவு ஆலோசகர் மக்கல் 02

## யசூசி அக்காஷி இன்று இலங்கை வருகிறார்

யுத்தத்தின் பின்னரான நிலவரங்களை நேரில் ஆய்வு செய்வதற்காக ஆறுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜப்பானின் விசேட சமாதானத்தூதுவர் யசூசி அக்காஷி இன்று 02



இடைநிறுத்தப்பட்டுள்ள விரிவுரைகளை உடனடியாக மீள ஆரம்பிக்குமாறு கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டம்

## ஆஸி.பயண முயற்சி: நேற்றும் 83 பேர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா நோக்கி இரண்டு ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் மூலம் பயணம் செய்ததாகக் கூறப்படும் சுமார் 83 பேர் திருகோணமலை கடற்பரப்பில் நேற்றுக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

"காவிந்தி" என்ற ஆழ்கடல் மீன்பிடிப் படகில் 31 தமிழர்கள், 8 சிங்களவர்கள் உட்பட 39 பேரும் (26 ஆண்கள், ஒரு பெண், ஒரு சிறுமி, 3 சிறுவர்கள்) "பிரசன்சனி" என்ற படகில் 35 தமிழர்களும் 6 சிங்களவர்களும் 02

# பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியில் கூட்டமைப்பு அங்கம்பெற வேண்டும்

### இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இதுவே வழியென்கிறது தென்னாபிரிக்கக் குழு

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அரசாங்கம் நியமிக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிப்பதே ஒரே வழி" என்று இலங்கைக்கு வந்து திரும்பிய தென்னாபிரிக்கக் குழு தெரிவித்துள்ளது.

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் கடந்த எட்டு மாதங்களாக தடைபட்டுள்ளன. இந்த நிலையிலேயே தென்னாப்பிரிக்காவின் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

இலங்கை சென்று திரும்பியுள்ள தென்னாபிரிக்கக் குழுவுக்கு தலைமையேற்ற அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தித்துறைத் துணை அமைச்சர் இப்பராஹிம் இப்ராஹிம் வழங்கியுள்ள செவ்வியில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஆனால் இலங்கை விடயத்தில் மத்தியஸ்தராகவோ அல்லது அனுசரணையாளராகவோ 02

## பூந்தமல்லியில் இன்று வைகோ முற்றுகை போராட்டம்

பூந்தமல்லி சிறப்பு முகாமை முற்றுகையிட்டு இன்று செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தப்போவதாக மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் வை.கோபாலசுவாமி அறிவித்துள்ளார். சிறப்பு முகாம்களிலுள்ள அனைவரையும் திறந்தவெளி முகாமுக்கு மாற்றக்கோரியே இந்த போராட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தக் கோரிக்கையை முன்வைத்து செந்தூரன் என்ற ஈழத் தமிழர் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் இருந்தார்.

## "இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்குகிறது" தமிழக அரசின் குற்றச்சாட்டை இந்திய மத்திய அரசு நிராகரிப்பு

இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுகிறார்களென்ற தமிழ்நாட்டின் குற்றச்சாட்டை இந்திய அரசாங்கம் மறுத்துள்ளது. "இலங்கைக் கடற்படையினர் இந்திய கடல் எல்லைக்குள் வருவதென்பது சாத்தியமற்றது. ஏனெனில் கடற்படைக் கப்பல்கள் இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைவதென்பது யுத்தம் நடத்தும் முயற்சி போன்றதாகும்" என்று இந்திய மத்திய அரசின் சார்பாக ஆஜரான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் எம்.ரவீந்திரன் குறிப்பிட்டார்.

நீதியரசர்கள் பி.பி.எஸ். ஜனார்த்தனராஜா, எம்.விஜயராகவன் ஆகியோர் முன்னிலையிலான நீதிமன்றில் ஆஜராகிச் சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்திய மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கக் கோரிக் கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட பொதுசனப் பாதுகாப்பு மனு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

"இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டார்கள் என்றால், அது இலங்கைக் கடல் எல்லைக் குள் தான் நடைபெற்றிருக்க முடியும். ஏனென்றால் இலங்கைக் 02

## ஐ.தே.க. எம்.பி. ரங்கே பண்டார மனைவியைத் தாக்கினாராம்

ஐ.தே.க.எம்.பி. ரங்கே பண்டாரவின் மனைவி விஜயலதா (வயது-47) தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை அனுமதிக்கப்பட்டார். கணவர் ரங்கே பண்டாரவின் தாக்குதலுக்கு இலக்காகிய இவர் காயமுற்றார் எனக் கூறப்படுகிறது. விஜயலதாவின் மூத்த தாரத்து மகனை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பதற்காக ரங்கே பண்டார வழங்கிய 35 இலட்சம் ரூபாவே இப்பிரச்சினைக்கு காரணமெனக் கூறப்படுகிறது.

பொலிஸாருக்கு அப்பெண்மணி வழங்கிய முறைப்பாட்டில் தனது கணவர் தன்னைத் தாக்கியதாக தெரிவித்துள்ளார். தனது மனைவி தன்னைத் தாக்கினார் என்றும் எம்.பி. பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. 02

## காணாமல்போனோர் பற்றி ஆராய விசேட குழு யாழ்.விஜயம்

யுத்தம் நடைபெற்ற காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே இதனை அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் பெருமளவானவர்கள் காணாமல் போயுள்ளனர். 02

## வெற்றிக் கொண்டாட்டங்களை நிறுத்திவிட்டு நல்லிணக்கத்தை நோக்கிச் செல்லுங்கள்

### முன்னாள் லைபீரிய ஜனாதிபதி

சகல வேறுபாடுகளையும் ஒரு பக்கம் தள்ளி வைத்துவிட்டு நல்லிணக்கத்தை நோக்கி வேலை செய்ய ஆரம்பிக்க வேண்டிய தருணம் இது" என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் லைபீரிய ஜனாதிபதி லெய்மா போவி கூறினார். நோபல் பரிசு பெற்றவரான லெய்மா போவி, கொழும்பில் நடைபெற்ற தேசிய சமாதான சபையின் கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார். 02

### வெள்ளவத்தை கொலை:

## உடற் பாகங்கள் பகுப்பாய்வுக்கு

வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரினதும் சடலங்கள் அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 02

# பொலிசாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பெற ம.உ ஆணைக்குழு முயற்சி

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தாத பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய வகையில், சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆராய்ந்து வருகிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகளை பொலிஸார் அமுல்படுத்தாத பல சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் அண்மையில் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனை சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடியதாகவும் மனித உரிமைகள் ஆணையாளர் பிரதீப மஹாநாம கூறினார்.

“சட்டத்தின்படி, இவ்வாறு ஒத்துழைக்காமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நாம் வழக்குத் தொடர முடியும். ஆனால் நாம் உயர்நீதிமன்றத்திற்கு செல்லாமல், நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய நிலையில் நாம் இருக்க வேண்டும். அதனால்தான் மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தை திருத்துவதற்கு நாம் முயற்சிக்கிறோம். பரிந்துரைகளை பொலிஸார் அமுல்படுத்தாமை தொடர்பாக பல முறைப்பாடுகள் உள்ளன“ என அவர் கூறினார்.

அத்துடன் கிரிமினல் வழக்குகளில் மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டறிந்த விடயங்களை சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு ஆணைக்குழு முயற்சிப்பதாகவும் மஹாநாம கூறினார்.

**இலங்கை நிர்வாக சேவை:**

# 121 பேருக்கு யாழ்ப்பாண கிராமங்களில் பயிற்சி

நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த 121 பேருக்கு யாழ் மாவட்டத்தில் கிராம மட்டத்திலான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் செப்டெம்பர் 14ஆம் திகதி வரை இவர்களுக்கு யாழ். மாவட்டத்தில் பயிற்சிகள் வழங்கப்பட விருப்பதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் பிரித்து அனுப்பப் படுவார்கள். அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பிரதேச செயலகங்களின் ஊடாக கிராம மட்டத்தில் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் மற்றும் அங்குள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள், நிர்வாக நடவடிக்கைகள் குறித்து அறிந்துகொள்வார்கள்.

இவர்கள் தமக்கு வழங்கப்பட்ட பகுதி குறித்த ஆய்வொன்றினையும் மேற்கொள்வார்கள் என அவர் குறிப்பிட்டார்.

## ஆஸி. செல்ல முயன்ற 962 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 962 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த தகவலை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், சிலாபம், நீர்கொழும்பு, பேருவளை, ஆகிய இடங்களிலே இந்த கைது நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இதனிடையே, கைது செய்யப்பட்டவர்கள் ரகசிய காவ ற்துறை யினரிடம் விசாரணை களுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## ஆஸி.பயண முயற்சி...(தொடர்)

3 முஸ்லிம்களுமாக 44 பேரும் (43 ஆண்கள், ஒரு பெண்) திருகோணமலை கடற்பரப்பிலிருந்து 15 மைல்களுக்கு அப்பால் பயணித்துக்கொண்டிருந்தபோது கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மூதூர், கொச்சிக்கடை, மட்டக்களப்பு, ஹபரணை, புளத்சிங்கள, பலாங்கொடை, கல்பிட்டி, ஸ்ரீபுர, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்டு மேலதிக விசாரணைக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## மீள்குடியேற்ற நிலவரம்...(தொடர்)

கொட்டின்ஸ், வில்லியம் பெல், ஜெம்ஸ் எப் பெரர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய அபிவிருத்த நிலைவரங்கள் தொடர்பில் இந்த அதிகாரிகளுக்கு யாழ். மாவட்டச் செயலர் விளக்கமளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி, மீள்குடியேற்றம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பில் இந்த சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக யாழ். மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

## பாராளுமன்ற தெரிவுக்...(தொடர்)

பங்காற்ற தாங்கள் முயலவில்லை என்றும் துணை அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிம் பி.பி.சி. யிடம் தெரிவித்தார். இலங்கை அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமான பேச்சு வார்த்தையில் ஏற்பட்டுள்ள முட் டுக்கட்டை நிலையைத் தீர்க்க மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அரசுக்கும் தமக்கு இடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத சூழலில், ஒரு மூன்றாம் தரப்பு அனுசரணையாளரின் உதவி இன்றியமையாதது என்றும் அதை கூட்டமைப்பு வரவேற்கிறது எனவும் அவர் கூறினார்.

இலங்கை சென்ற தென்னாப்பிரிக்க குழுவினர் அரச தரப்பையும், கூட்டமைப்பினரையும் சந்தித்து பேசியுள்ளனர். அதன் போது இரு தரப்புமே தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதை தாங்கள் அறிந்து கொண்டதாக இப்ராஹிம் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பினரும் வர வேண்டும் என்றும், அதன் மூலமே தீர்வு காண முடியும் எனவும் அரசு கூறுகிறது. கூட்டமைப்போ அரசுக்கும் தமக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்ட பிறகு தெரிவுக் குழுவில் பங்கேற்பது குறித்து முடிவு செய்யலாம் என்று கூறுகிறது. இதன் காரணமாகவே பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஆனால் அரசாங்கம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## ஐ.தே.க.எம்.பி.ரங்கே...(தொடர்)

“எனது கணவருடன் கடந்த 13 வருடங்களாக மனைவி என்ற ஸ்தானத்துடன் ஒன்றாகவே வாழ்ந்து வந்திருக்கின்றேன்.

ஆனால் இனி அவரை விட்டு வாழ்வதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை” என்று அந்தப் பெண்மணி கூறினார்.

“அவரோடு வாழ்ந்த காலத்தில் நான் பெரும் கஷ்டங்களைச் சந்தித்தேன். அவர் அடித்தபோதெல்லாம் நான் அதைத் தாங்கிக்கொண்டேன் வெள்ளிக்கிழமை இரவு கைகளாலும், கால்களாலும் அவர் என்னைத் தாக்கிய போது என்னைப் பாதுகாக்க எவரும் இருக்கவில்லை” என்று அப் பெண்மணி கூறினார்.

காயங்களுக்கு சிகிச்சை பெற்ற பின்னர் நேற்று அப்பெண்மணி வைத்தியசாலையை விட்டு வெளியேறினார்.

## வெற்றிக் கொண்டாட்டங்களை...(தொடர்)

இராணுவ சக்தியைப் பயன்படுத்துவதானது, மேலும் வன்செயல் விளைவுகளையே ஏற்படுத்தும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல் செய்வதற்கான அரசியல் உறுதிப்பாடே இப்போதைய சேவையாகும் என்றும் சொன்னார். அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

லைபீரியாவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறையில் ஒவ்வொரு கட்சியினதும் பங்களிப்பை வலியுறுத்தும் ஒரு திட்டத்தை முன்வைத்தோம் இப்போது அந்தத் திட்டத்தை சிவில் சமூகத்தின் அங்கீகாரத்துக்காக முன்வைத்துள்ளோம். நல்லிணக்கத்தை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளுக்குப் பல்வேறுபட்ட கருத்துகள் இருந்தமையாலும், நல்லிணக்கத்துடன் அரசியல் விளையாட்டுகளில் அவர்கள் ஈடுபட்டதாகவும் அந்த முயற்சி தாமதமடைந்தது.

மோதலால் பாதிக் கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டியது மிகவும் முக் கியமானதாகும்.

நீதியை வழங் காமல் நல்லிணக்கம் பற்றிப் பேச முடியாது. பல வருடங்கள் நீடித்த யுத்தத்தின் பின்னர், விடையளிக்கப்படாத பல கேள்விகள் மக்களிடத்தில் உள்ளன. இந்தக் கேள்விகளுக்குப் பதில் காணப் பட வேண்டும்.

லைபிரியாவில் யுத்தக் குற்றங்களுக்காக முன் னாள் ஜனாதிபதி மீது வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கையில், முன்னாள் யுத்தப் பிரபுக்கள் பாராளுமன்றத்தில் இருப்பதை இப்போதும் நாம் காண்கிறோம். இவர்கள்தான் எமது நாட்டில் நல்லிணக்கம் பற்றிப் பேசுகிறார்கள். நீடித்த யுத்தத்தின் பின்னர் எழக் கூடிய சிக்கல்கள் இவை. நீதியை வழங்கு வதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

லைபீரியாவில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டபோது நாம் சிறுவர் போராளிகளுடன் இணைந்து பணிபுரிந்தோம். எனது சகா ஒருவர் அவர்களுக்கு உணவு வழங்குவதற்குப் பொறுப்பாக இருந்தனர். ஒருநாள் சிறுவர் போராளி ஒருவருக்கு அவர் உணவூட்டிக் கொண்டிருந்தபோது, அவனது மகளை வன்புணர்வுக்கு உள்ளாக்கிக் கொன்றது தானேயென அவன் சொன்னான். அவனுக்கு உணவளிப்பதை நிறுத்தி விட்டாயா என்று அழுதுகொண்டு ஓடிவந்த அவனைக் கேட்டேன் தான் நிறுத்தவில்லை என்று என்னைப் பார்த்துச் சொன்ன அந்தப் பெண்மணி, “சமாதானம் என்பது முன்னேறிச் செல்வதாகும் என்று அந்தப் பெண் கூறினார். அதனால்தான் சொல்கிறேன், சமாதான முன்முயற்சிகளுக்குப் பெண்களால் அற்புதமான பெறுமானங்களைச் சேர்க்க முடியுமென்று. முன்னோக்கிச் செல்வதற்கும், மன்னிப்பதற்குமான திறமை பெண்களுக்கு உண்டு.

இவ்வாறு முன்னாள் லைபீரிய ஜனாதிபதி கூறினார்.

## காணாமல் போனோர் பற்றி...(தொடர்)

அதிலும் 2006ஆம் ஆண்டில் இது தொடர்பில் அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

2006 ஆண்டில் மாத்திரம் 468 பேர் காணாமல்போயுள்ளதாகவும் அதில் 128பேர் மீண்டும் திரும்பி வந்துள்ளதாகவும் முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காணாமல்போன 196 பேரின் நிலமை இன்று வரை என்னவென்று தெரியாமல் உள்ளது.

இந்த 196 பேரின் நிலைபற்றி பற்றி ஆராய்வதற்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## யசூசி அக்காஷி இன்று...(தொடர்)

இலங்கை வருகிறார். இலங்கையில் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தங்கியிருக்கும் அக்காஷி அரசாங்கத்தின் முக்கியப் பிரதிநிதிகள் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், சிவில் சமூக உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இதேவேளை, வட மாகாணத்தில் மோதல் இடம்பெற்ற பகுதிகளில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திகளை கண்டறிவதற்கென இவர் வடக்குக்கு நேரில் விஜயம் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் ஜப்பானிய தூதரகம் தெரிவித்தது.

அண்மையில், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக் குழுவின் பரிந் துரைகளை அமுல்படுத்துவது தொடர் பான தேசிய வேலைத் திட்ட மொன் றும் வெளியாகியுள்ள நிலையில் ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் அக்காஷியின் இலங்கைக்கான விஜயம் பொருத்தமானதாக அமையுமென நம்புவதாக ஜப்பானிய தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## இந்திய மீனவர்களை இலங்கை...(தொடர்)

கடல் எல்லைக்குள் புகுந்து அங்குள்ள கடல்வளத்தை இந்திய மீனவர்கள் சூறையாடுவதால் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மீனவர்களைத் தவிர வேறு யாரும் இந்திய மீனவர்களுக்கு எதிரான-வர்கள் அல்லர் என்றும் இந்தியாவின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடலிலுள்ள வளங்கள் கடந்த காலங்களில் அளவுக்கதிகமாகச் சூறையாடப்பட்டுவிட்டன. ஆனால் இலங்கைக் கடலில் நிலைமை அவ்வாறல்ல. புலிகள் இருந்த காலத்தில் சிவில் யுத்தம் நடைபெற்றபோது வருடக் கணக்காக இலங்கை மீனவர்களால் கடலுக்குச் சென்று மீன் பிடிக்க முடியவில்லை. இப்போது தான் இலங்கை மீனவர்களால் தங்கள் கடற்பிராந்தியத்தில் சுதந்திரமாக மீன்பிடிக்க முடிகிறது. எனவே தான் இலங்கைக் கடல் எல்லைக்குள் புகுந்து தடைசெய்யப்பட்ட இழுவைப் படகுகளையும், வலைகளையும் பயன்படுத்தி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்படுகின்றன என்றும் ரவீந்திரன் கூறினார்.

வழக்கு விசாரணை செப்டம்பர் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டும்போது மட்டுமல்ல, இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள், தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்று தமிழக அரசு தாக்கல் செய்த பொதுசனப் பாதுகாப்பு மனு மீதான விசாரணையின்போதே ரவீந்திரன் மேற்கண்டவாறு கூறினார். அதாவது அவர் தமிழக அரசின் குற்றச்சாட்டுகளை மறுத்தார்.

## உடற்பாகங்கள் பகுப்...(தொடர்)

நேற்று இச்சடலங்களின் பிரேத பரிசோதனைகள் நடத்தப்பட்டன. பிரதம வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர உள்ளிட்ட நீதிமன்ற வைத்திய அதிகாரிகள் குழுவினர் இணைந்து நேற்று பிரேத பரிசோதனைகளை நடத்தியிருந்ததாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண கூறினார்.

பிரேத பரிசோதனையை யடுத்து மூன்று சடலங்களினதும் உடல் உறுப்புகள் இரசாயன பகுப்பாய்விற்காக, இரசாயன பகுப்பாய்வுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரசாயன பகுப்பாய்வு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டே இம் மூவரும் உயிரிழந்தமைக்கான காரணத்தை உத்தியோகபூர்வமாக கூறமுடியுமென வும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ளவத்தை கொலைச் சம்பவம்:

# கொழும்பிலும் நுவரெலியாவிலும் பொலிஸார் பல கோணங்களில் விசாரணை

வெள்ளவத்தை ராமகிருஷ்ணா டெரஸ் வீதியில் வீடொன்றில் இருந் துசடலங்களாக மீட்கப்பட்டவர் களின் மகன் பிரகஷ் குமாரசாமி கொட்டகலை டெலிகளார் தோட் டத்திலுள்ள தனது வீட்டிற்கு கடந்த 16ஆம் திகதி வந்து சென்றதாக தோட்ட மகக்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பத்தனை பொலிஸார் இந்தக் குறிப்பிட்டத் தோட்டத்திற்கு சென்று உயிரிழந்தவர்களின் வீட்டினை அவதானித்த போது வீட்டின் முன்கதவிலுள்ள பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் இருந்துள்ளது.

அத்துடன், அந்தக்கதவு உட்புறமாக பூட்டப்பட்டிருந்ததையும் பொலிஸார் அவதானித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து வீட்டினுள் சென்ற பொலிஸார் வீட்டினுள்ள அறையொன்றில் இருந்த அலுமாரி உடைக்கப்பட்ட அதனுளளிருந்த பொருட்கள் சிதறப்பட்ட நிலையில் இருந்துள்ளதை பொலிஸார் அவதானித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நுவரெலியா மற்றும் வெள்ளவத்தைப் பொலிஸார் இந்தச்சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளவத்தை ராமகிருஷ்ணா டெரஸ் வீதியில் வீடொன்றில் இருந்து மீட்கப்பட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேரின் சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.



கொழும்பு திம்பிரிகஸ்யாயவை சேர்ந்த எம். டேவிட் என்பவர், கதிர்காமம் கிரிவேரவிலிருந்து காங்கேசன்துறை வரையிலான சமா தான பாதயாத்திரையொன்றை ஆரம்பித்துள்ளார். அவர் நேற்று முன்தினம் கொழும்பை வந்தடைந்தபோது அவரின் அயலவர்களால் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் நேற்றுத் திங்கட்கிழமை மீண்டும் தனது பயணத்தை தொடர்ந்தார்.

# செல்வச் சந்நிதி மகோற்சவம் தொடர்பான விசேட கூட்டம்

(வல்வெட்டித்துறை)

கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமான தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தையொட்டி, அது சம்பந்தமான விசேட கூட்டமொன்று கடந்த வாரம் ஆலய சூழலில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நகரசபை மற்றும் பிரதேச சபையின் தலைவரகள் மற்றும் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், தொண்டர் அமைப்புகளின் தலைவர்கள், ஆலய நிர்வாகத்தினர் இவ்வருட பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு, மருத்துவம், மின்சாரம், உணவு, குடிநீர் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப் பட்டன.

இதன்பிரகாரம் மகோற்சவ காலத்தில் வருகைதரும் பக்தர்களுக்கு எதுவித அசௌகரியங்களும் ஏற்படாத வகையில் பல செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (01)

சட்டவிரோத வெளிநாட்டுப் பயணம்:

# கேரளாவில் கைதான 12 இலங்கையர் விளக்க மறியலில் இருந்து விடுதலை

கேரள மாநிலத்தின் கொல்லம் நகரில் கடந்த ஜூன் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் 12 பேர் விளக்கமறியலில் இருந்து கடந்த சனிக்கிழமை விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

மீன்பிடி படகொன்றில் வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாக தப்பிச் செல்ல முயன்ற இவர்களை கேரள பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கொல்லம் முதல் வகுப்பு 2 ஆம் பிரிவு நீதிமன்றத்தின் நீதிபதி எவ். மினிமோல் இவர்களை விளக்கமறியலில் இருந்து விடுதலை செய்தார்.

இவர்கள் குற்றச்சுமத்தப்பட்ட நபர்கள் அல்ல, பாதிக்கப்பட்டவர்கள் என வகைப்படுத்தும் வெளிவிவகார அமைச்சின் அறிவுறுத்தலொன்றின்கீழ் இவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக வழக்குரைஞர் ரமேஷ் குமார் கூறினார்.

விசாரணை அதிகாரியினால் அரசாங்கத்துக்கு சமர்ப் பிக்கப் பட்ட அறிக்கையின்படி, இவர் கள் பாதிக்கப்பட்டவர்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதே வேளை இவர்கள் விளக்க மறியலில் இருந்து விடுவிக்கப் பட்ட போதிலும் வழக்கிலிருந்து விடுவிக்கப்படவில்லை என வழக் குத்தொடுநர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்படவுள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகும்வரை பத்மநாதபுரம் காந்தி பவனிலுள்ள அரசாங்க பாதுகாப்பு நிலயைத்தில் தங்கவைக்கப்பட்டிருப்பர். அங்கிருந்து வெளியேறுவதற்கு இவர்களுக்கு அனுமதியில்லை. எனினும் எனினும் உறவினர்களை சந்தித்து உரையாட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கணவன் கொலை வழக்கின் சாட்சியான மனைவியும் சுட்டுக்கொலை

வாதுவை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களால் பெண்ணொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தின் வாதுவை மொரொன்குடுவ வீதியில் இரும்புப்பொருட் கடையொன்றின் ஊழியரான பெண்ணொருவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப் பட்டுளார்.

நான்கு பிள்ளைகளின் தாயான இந்திராணி அத்தசூரிய (44) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். அவர் கடையில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை, கடைக் குள் நுழைந்த நபர்கள் அவரின் முகத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

அவர், பாணந்துறை வைத்தியசாலைக்கு அயலவர்களால் அழைத்துச் செல்லப்பட்டபோதிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தையடுத்து அப் பகுதியில் சுமார் இரு மணி நேரம் பதற்றம் நிலவியது.

சந்தேக நபர் கள் இருவரையும் கைது செய்வதற்கு பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கிராமவாசிகளிடம் பொலிஸார் தெரிவித்ததையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

இப்பெண்ணின் கணவர் சில வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இவ்வழக் கில் இப்பெண்ணும் ஒரு சாட்சியாக இருந்தார்.

அவ ரின் கணவரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் களுக்கு இப்பெண்ணின் கொலையுடனும் தொடர்பிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

# காணாமல்போன குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

மாகந்தனமுல்ல பிரதேசத்தில் காணாமற்போன நபர் ஒருவரது சடலம், அப்பிரதேசத்திலுள் வீடொன்றின் பின்புறமாக புதைத்து வைக் கப்பட்ட நிலையில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் மொனராகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலத்தில் வெட்டுக் காயங்கள் இருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கொலை செய்யப்பட்டவர் ஒரு குழந்தையின் தந்தை என தெரிவிக்கப்படுகிறது.

பணப் பிரச்சினை காரணமாக சந்தேக நபர்களினால் இக் கொலை செய்யப்பட்டுள்ளதாக, முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

# நல்லூரில் தவறவிடப்பட்ட தங்கச்சங்கிலி கண்டெடுப்பு

நல்லூர் கந்தசுவாமி உற்சவகாலத்தில் தவறவிடப்பட்ட தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இந்தத் தங்கச் சங்கிலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளலாம் யாழ்.மாநகசபை அறிவித்துள்ளது.

இதற்காக யாழ்.மாநகரசபையும் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் ச.யோகசிவத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 0718562025 என்ற கைத்தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

# வேலணையில் குளங்கள் புனரமைப்பு

வேலணை பிரதேசசபையின் தவிசாளர் சி.சிவராசாவின் வேண்டுகோளுக்கிணங்க வேலணை பிரதேசசபைக்குட்பட்ட இடங்களில் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அந்த அடிப்படையில் வேலணை பிரதேசசபையின் தவிசாளரும் வேலணை பிரதேசசபையின் உறுப்பினர் பா.தவபாலன் திட்ட பொறியிலாளர் மற்றும் திட்டஉத்தியோகத்தர்கள் அல்லைப் பிட்டி, சரவணை, அம்பிகைநகர் மற்றும் குழு மண்கும்பான், மண்டைதீவுப் பகுதிகளில் உள்ள குளங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

# நக்கில்ஸ் மலை தொடரில் காட்டுத் தீ

நக்கில்ஸ் மலைத் தொடர், யஹன்கல பிரதேச பகுதியில் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட காட்டுத் தீ தொடர்ந்து பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் வீசும் கடுமையான காற்றின் காரணமாக தீ தொடர்ந்தும் பரவுவதாக கசலக்க பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையான காலப்பகுதியில் 5 ஏக்கர் வரையான பூமி தீக்கிரையாகியுள்ளது.

எனினும் தீயை அணைப்பதற்கு அதிகாரிகள் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை என கசலக்க பொலிஸார் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

# இன்றைய இராசி பலன் (21.08.2012)

**நந்தன வருடம் ஆவணித் திங்கள் 5 ஆம் நாள் செவ்வாய்**

**நட்சத்திரம்** : அத்தம் மாலை 6.25 வரை அதன் பின் சித்திரை
**திதி** : சதுர்த்தி மாலை 4.45 வரை. அதன் பின் பஞ்சமி
**சுபநேரம்** : 10.35 - 12.05 **இராகுகாலம்** : 3.05 - 4.35
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)
**மேடம்** : வீண்செலவு, பணக்கஷ்டம், எதிரிகளால் தொல்லை.
**இடபம்** : தொழில் இலாபம், இலல்லச் சிறப்பு, புத்திர நன்மை.
**மிதுனம்** : தேக சுகக் குறைவு, குடும்பக் கலக்கம், தாய்வழி சஞ்சலம்
**கடகம்** : வீண் முயற்சி, அலைச்சல், கொடுக்கல் வாங்கல் பிரச்சினை
**சிங்கம்** : காரிய சித்தி, தெய்வ அனுகூலம், புத்திரரால் நன்மை.
**கன்னி** : நிம்மதியின்மை, கபால ரோகம், குடும்ப சஞ்சலம்.
**துலாம்** : கைப்பொருள் இழப்பு, தூக்கக் குறைவு, அகால போசனம்.
**விருச்சிகம்** : பணப் புழக்கம், விவாக முயற்சி, இனசனம் வருகை.
**தனுசு** : தொழில் நன்மை, சுபகாரியச் செலவு, கடன் படல்.
**மகரம்** : பொருள் சேருதல், பூமியால் இலாபம், தல யாத்திரை.
**கும்பம்** : காரிய அலைச்சல், குடும்பச் சச்சரவு, வீண் மனஸ்தாபம்.
**மீனம்** : தொழில் விருத்தி, போசன சுகம், விவாக நன்மை.

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# சமூக நோய்களுக்குத் தீர்வு காணும் வைத்தியர்களாக எழுத்தாளர்கள் விளங்க வேண்டும்

## -தமிழ்நேசன் அடிகளார்

(வல்வெட்டித்துறை)

தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்ற இக் காலகட்டத்தில் எழுத்தாளர்கள் சமூகத்தில் வகிக்கும் பங்கு மிக முக்கியமானது. அவர்கள் சமூக நோய்களுக்குத் தீர்வு காணும் வைத்தியர்களாக இருக்க வேண்டும். அத்துடன் சமூகத்தினுடைய நோய்களை இனம் கண்டு அவற்றுக்கு தகுந்த வைத்தியம் செய்வதோடு அச்சமூகம் அல்லது சமுதாயம் மென்மேலும் பாதிக்கப்படாமல் காத்துக் கொள்ளவும் வேண்டும். அது எழுத்தாளர்களுடைய கடமையாகும் என்று மன்னார் தமிழ் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்தார்.

சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய 'பகிர்வு' கட்டுரைத் தொகுதி அறிமுக விழா கடந்த நான்காம் திகதி கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் எஸ்.செல்வானந்தன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தமிழ்நேசன் அடிகளார் தெரிவத்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்:

வாழ்க்கையில் கற்றுக் கொள்வதிலேயே நம் ஆயுள் முடிந்து விடுகின்றது. மாடுகள் உணவை உண்பதை விட, அசைபோடுகின்ற போதுதான் அழகாக இருக்கும். மாட்டுக்கும் அதுதான் சுவையாகவும் இருக்கும். ஆகவே தான் ஒவ்வொரு எழுத்தாளனும் தான் படித்த நல்ல விடயங்களை, அதிலும் தனக்குப் பிடித்தவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நம் தமிழ் வாக்குக்கு ஏற்ப தற்போது வெளியிடப்படுகின்ற "பகிர்வு" எனும் நூல் போன்று ஒவ்வொரு எழுத்தாளனும் எழுத வேண்டும். விரிக்கும் சிறகு இரண்டாக இருந்தாலும் பறக்கும் திசை ஒன்றுதான். பல வகையான நூல்கள் இந்த நூலின் ஆசிரியர் கூறுவது நான் கற்றுக் கொண்டதை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள் என்றுதான்.

"மக்காவில் கண்ணீர் பூக்கள்" என்ற கவிதை வெளிவந்த காலத்தில் கவிதையுலகில் அந்த கவிதை பரபரப்பாக பேசப்பட்டது. அக் கவிதையில் வானம்பாடிகளே வானம்பாடிகளே இந்த பூமி உருண்டையில் புரட்டி விடக் கூடிய அளவுக்குயார், பாடப் போகின்றீர்கள்? என்ற கேள்விகளோடு இக் கவிதை அமைந்தது. இதில் பூமியை புரட்டி விடக் கூடிய நெம்பு கோல்களாக எழுத்துக்கள் அமைந்திருந்தன. அது போன்ற எழுத்துக்கள் அமைந்திருந்தன. அதுபோன்ற எழுத்துகள் தான் எமது சமுதாயத்திலும் எதிர்பாக்கப்படுகின்றது. எழுத்து என்பது ஆற்றல் வாய்ந்த ஆயுதம். சோவியத் கொள்கையை இந்த உலகத்துக்கு அறிமுகப்படுத்திய பார்மாக் என்பவர் கூறினார்: "26 வீரர்களை என்னிடம் தாருங்கள் மாபெரும் புரட்சியை நான் ஏற்படுத்திக் காட்டுகிறேன் என்று. அவை யார் என்றால் ஆங்கில எழுத்துக்கள்தான். பேனா வலிமை மிக்கது. அதனால் எழுத் தாளனும் சமுதாயத்தின் வைத்தி யர்களாக வேண்டும். எழுத்தாளர்கள் தேடல்களின் வெளிப்பாடகவும், வழிகாட்டுபவனாகவும் அமைய வேண்டும்.

தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும். தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசி இருக்கும். என இக்காலக் கவிஞன் பாடுகின்றான். எனவே தேடி உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எழுத்தாளனுக்கு உண்டு. நாம் வாழுகின்ற காலம் தகவல் தொழில் நுட்ப காலமாக இருக்கின்றது. ஆபிரகாம்லிங்கன் சுடப்பட்டு இறந்த செய்தி ஒரு மாத காலத்தின் பின் தான் உலகத்திற்கு அறிய வந்தது. ஆனால் இன்று உலகத்தின் ஒரு மூலையில் நடக்கின்ற நிகழ்ச்சி அடுத்த நிமிடமே மூலைமுடுக்கெல்லாம் சென்று விடுகின்றது. அந்தளவுக்கு தகவல் தொழில்நுட்பம் வேகமாக இயங்குகின்றது. இப்படியான சூழ்நிலையில் இன்றைய ஊடகங்கள் மனித சமுதாயத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கம் மிகப் பெரியதாக உள்ளது. ஊடக வளம் கொண்டவன் 26ஆம் நூற்றாண்டை தாண்டி விடுவான் என்ற அளவுக்கு ஊடகங்கள் தமது ஆட்சியை செலுத்துகின்றன. இந்த ஊடக யுகத்தில் வாசிப்புப் பழக்கம் குறை வடைந்து நிற்பதையும் நாம் காண்கின்றோம். அச்சு எழுத்துக்களில் வாசித்து கொண்டிருந தவர்கள், இன்று திரையிலே வாசித்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான கணினி உலகில் இன்ரநெற் மூலமான பல வகையில் விடயங்களை கணணித் திரையில் பார்க்கக் கூடிய அளவுக்கு முறைமை மாறிவிட்டது.

ஆபிரகாம்லிங்கனுடைய 'போகின் றேன் மறவாதே' என்ற நூல் பாமரனின் புரட்சிக்கு வித்திட்டது. சமுதாய ரீதியான பல நூல்கள் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள் ளன. எனவேதான் நாம் நேசிக்க கற்றுக் கொள்வோம், வாழ்க்கை ஆழப்படும். வாசிக்க கற்றுக்கொள் வோம், வாழ்க்கை வசப்படும். யாரையும் பார்க்காமல், யாரையும் தாக்காமல் இந்த மண்ணிலே நாம் இலக்கியம் படைப்போம். வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நூலின் வெளியீட்டுரைகளை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் சுந்தர பாரதி ஆற்றினார். முதல் பிரதியினை பொருளியலாளர் த. தர்மசீலன் ஏற்றுக்கொண்டார். நூல் அறிவுரையினை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலிசன் லண்டன் முகாமைத்துவ பட்டதாரி ரி.இன்பரூபன் ஆகியோர் ஆற்றினர்.

---

# தேசிய மட்ட தமிழ் விவாதப் போட்டியில் யாழ்.மாவட்டக் குழுவுக்கு முதலிடம்

அகில இலங்கை ரீதியில் யௌவனப் பாலியல் தொடர்பாக நடத்தப்பட்ட தேசிய மட்ட விவாதப் போட்டியில் யாழ்.மாவட்ட விவாதக் குழு முதலிடத்தைப் பெற்றது. இளைஞர் தினத்தையொட்டி கடந்த 12ஆம் திகதி கொழும்பு, பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இப் போட்டி இடம்பெற்றது. "ஊடகங்களில் வழங்கப்படும் பாலியல் மற்றும் இனவிருத்தி தொடர்பான கருத்துக்கள், இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றன" என்ற அணியில் வாதிட்ட யோ. சுதாகரன் (அணித்தலைவர்), என். புஸ்பம், ரீ.விமல்சினி, ஜெயம் ஜெகன் ஆகியோர் முதலாம் இடத்துக்கான கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.



இந்த விவாதப் போட்டியில் 12 தமிழ் விவாதக் குழுக்கள் பங்கு பற்றின. யாழ். மாவட்ட விவாதக் குழுவின் தலைவர் யோ.சுதாகரனுக்குச் சிறந்த அணித் தலைவருக்கான விருதும், ஜெயம் ஜெகனுக்குச் சிறந்த பட்டிமன்றப் பேசாளனுக்கான விருதும் வழங்கப்பட்டன.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம், இலங்கை இளைஞர் அமைப்புக்களின் வலைப்பின்னல், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை குடும்பத் திட்டச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் இந்த விவாதப் போட்டிகள் நடத்தப்பட்டன. இறுதிப் போட்டிக்கு முன்னதான போட்டிகள் மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வளாகத்தில் கடந்த 9, 10, 11 ஆம் திகதிகளில் நடைபெற்றன. இதில் 18 சிங்கள விவாதக் குழுக்களும், 12 தமிழ் விவாதக் குழுக்களும் பங்குபற்றின.

இளைஞர்களின் பாலியல் மற்றும் இனப் பெருக்கச் சுகாதாரம் மற்றும் உரிமைகள் தொடர்பான கலந்துரையாடலை ஏற்படுத்துவதே இவ்விவாதப் போட்டிகளின் நோக்கமாகும். ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தலா இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் அடங்கிய நால்வர் கொண்டவர் ஒரு குழுவில் அடங்கியிருந்தனர். இவர்களுக்கான கேடயத்தை அமைச்சர் டளஸ் அழகப் பெருமா வழங்கினார்.

மேலே குறிப்பிட்ட அமைப்புக்களினால் நடாத்தப்பட்ட தேசிய போட்டியில் முதல் முறையாக யாழ்.மாவட்ட விவாதக் குழுவினர் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு யாழ். மாவட்ட இளைஞர்களின் இணைப்பாளர் அ.விமலதாஸ் தெரிவித்துள்ளார்.

---

# முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(வல்வெட்டித்துறை)

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் தமிழ் சித்திரம், சங்கீதம், நடனம், விவசாயம், வர்த்தகம், மனையியல், வரலாறு ஆலோசனையும் வழிகாட்டலும் ஆகிய பாடநெறிகளுக்கான சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் முல்லைத தீவு கல்வி வலயத்துக்குட்பட்டவராகவும், குறித்த பாடத்தினை அல்லது அதற்கு சமமான பாடத்தினை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பவராகவும் இருக்க வேண்டும். விண்ணப்பிக்கின்ற பாடத்தில் குறைந்தது ஏழு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து பட்டம் பெற்றவர்களும், பயிற்சித்துறையில் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னதாக முல்லைத் தீவு கல்வி வலயத்தில் சமர்ப்பிககுமாறு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.வரதராஜமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

---

# கவிதைத் தொகுப்பு வெளியீடு

(வல்வெட்டித்துறை)

சித்திரா சின்னராஜன் எழுதிய வல்லைவெளி எனும் கவிதை தொகுப்பு அறிமுக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய மண்டபத்தில் எழுத்தாளரும் கலாபூசணமுமாகிய தெணியான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் வெளியீட்டுரையினை யாழ்.பல் கலைக் கழக சட்டத்துறை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய கலாநிதி ந.கலாமணியும் நூலின் முதல் பிரதியினை யாழ்ப்பாண புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவன (IOM) பொறுப்பதிகாரி தேவதாஸ் யூறிசன் ஜெனராஜ் அவர்கள் பெற்றுக்கொண்டார். நயப்புரையினை பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் நிகழ்ததினார். மதிப்பீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எழுத்தாளர் இ.இராஜேஸ்கண்ணாவும் ஏற்புரையினை நூலாசிரியர் க.சின்னராஜன் ஆகியோரும் ஆற்றியிருந்தனர்.

---

# யாழ்.அரச அதிபர் வெற்றிக் கிண்ண போட்டிகள்

யாழ்.அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டிகள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையில் இடம்பெற்று வருகின்றன.

ஆண்கள் மற்றும் மகளிருக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் நேற்று காலை 8.30 மணியளவில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது.

உதைபந்தாட்டப் போட்டி கள் எதிர்வரும் 26,27,28ஆம் திகதிகளில் அரியாலை காசிப் பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறும்.

---

# பாடசாலைகளில் சிறுவர் துர்ப்பிரயோகப் பதிவுப் புத்தகம்

தற்போது அதிகரித்துவரும் சிறுவர் துர்ப்பிரயோகம் உள்ளிட்ட சிறார்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் தொடர்ச்சியாக முறைப்பாடுகளை பாடசாலைகளில் பதிவுப் புத்தகம் ஒன்றைப் பேணுமாறு பொலிஸ் மா அதிபர் என். கே.இலங்ககோன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதி பொலிஸ் மா அதிபர்களின் ஊடாக நாடளாவிய ரீதியாக உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஏற்பாடுகளால் பல்வேறு தரப்பினராலும் சிறுவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் துர்ப்பிரயோக நடவடிக்கைகள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் பாடசாலை சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க முடியும் என நம்பப்படுகிறது.

சம்பவங்கள் பாடசாலை களில் தெளிவாகப் பதிவு செய்யப் படும் போது பொலிசார் நடவடிக்கை எடுப்பதற்கு இலகுவாக அமையும்.

சகல பாடசாலைகளிலும் இந்தப் பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

# முல்லை மாவட்டத்தில் உள்ள 55 பாடசாலைகளில் 41 இயங்குகின்றன

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட 55 பாடசாலைகளில் 41 பாடசாலைகள் தற்போது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இயங்கிவருகின்றன எனவும் ஏனைய 14 பாடசாலைகள் இயங்குவதற்கு ஏதுவான நிலை 3 ஆம் தவணை ஆரம்பத்தில் உள்ளதெனவும் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் ரி.வரதராஜமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் அண்மையில் சிவநகர் தமிழ் வித்தியாலயம் 27.07.2012 ஆம் திகதி திறக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இங்கு ஆறு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இப் பாடசாலையில் சுமார் 52 மாணவர்கள் தரம் 01 தொடக்கம் 5 வரையான மாணவ மாணவியருடன் இயங்குகின்றது.

யுத்தத்தினால் மேற்கூரைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் யுனிசெப் உதவியுடன் கூரை விரிப்புப் போடப்பட்டு இயங்கிவருகின்றது.

பாடசாலைக் கட்டிடத்தை திருத்துவதற்கான ஒரு தொகை நிதியினை சேவாலங்கா நிதிய நிறுவனம் மற்றும் அரச பங்களிப்பு நிதியின் மூலமும் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாகவும் மேலும் இவ்வருட மூன்றாம் தவணை ஆரம்பத்தில் மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம், வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயம், முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட இந்து வித்தியாலயம், மாத்தளன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, முள்ளிவாய்க்கால் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வலைஞர்மடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஆனந்தபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய 9 பாடசாலைகளும் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வரும் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் ஆகும். இவை மூன்றாம் தவணை தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்கப் படவுள்ளன என்றார்.

# நாளை புதுக்குடியிருப்பு கிழக்கு, மல்லிகைத்தீவில் மீள்குடியேற்றம்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்புக் கிழக்கு மற்றும் மல்லிகைத்தீவு (மாளிகைத்தீவு) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் நாளை மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது.

போர்ச் சூழலினால் இடம்பெயர்ந்து, தற்போது உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் வசித்து வரும் மேல் குறிப்பிட்ட பிரதேச மக்களே நாளை புதன்கிழமை மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

நாளை தொடக்கம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காலை 9.00 மணிக்கு கைவேலி கணேசா வித்தியாலயத்திற்கு சமூகம் தந்து தமது மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இப் பிரதேச மக்கள் வரும் போது தற்போது வசிக்கும் கிராம சேவகர் பிரிவில் இருந்து தமது பதிவுகளை நீக்கியதிற்கான சான்றிதழ்கள் மற்றும் குடும்ப விபரம் தொடர்பான ஆவணங்களுடன் சமூகம் கொடுக்கும்படி அசர அதிபர் கேட்டுக் கொண்டார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 19 கிராம சேவகர் பிரிவுகளில் 15 கிரம சேவகர் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## அபராதம் விதிப்பு

**வல்வெட்டித்துறை**

வல்வெட்டித்துறைப் பகுதியில் அனுமதியின்றி அரச சாராயம் வைத்திருந்த ஒருவருக்கு எதிராக பருத்தித்துறை தீதவான் நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறை பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் வைத்திருந்த நபர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இந்த வழக்கினை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நபருக்கு 25 ஆயிரம் ரூபாதண்டப்பணமாக விதித்து தீர்ப்பளித்துள்ளது.



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் இரண்டாம் நாள் திருவிழா தினமான 19 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை துர்க்கையம்மன், பிள்ளையார் சகிதம் வெளிவீதி உலாவரும் காட்சியைப் படங்களில் காணலாம். (வலிகாமம் நிருபர்)

# மோ. சைக்கிளால் மாணவியை இடித்தவருக்கு அபராதம்

**வல்வெட்டித்துறை**

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்வெட்டித்துறை வேம்படி வீதியால் தனியார் கல்வி நிலையத்துக்கு சென்று கொண்டிருந்த மாணவியை இடித்து விழுத்தி பின் அராஜகம் புரிந்து சென்றவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் அபராதம் விதித்ததுடன் அவரை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடும்படி கடுமையான உத்தரவு பிறப்பித்தது.

குறித்த நபரின் அநாகரிக செயற்பாட்டினால் 15 வயது மாணவியின் பெற்றோரால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து மோட்டார் சைக்கிள் இலக்கத்தை வைத்து குற்றவாழி கைது செய்யப்பட்டார்.

இவரை கடந்த மாதம் 23 ஆம் திகதி நீதிவான் முன்னிலையில் பொலிஸார் ஆஜர் செய்த போது நீதிபதி குறித்த நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் இம் மாதம் 8 ஆம் திகதி மேற்படி வழ்க்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிபதி ஸ்ரீநிதிநந்தசேகரன் குறித்த நபருக்கு ஆயிரம் ரூபா அபராதமாக விதித்ததுடன் 5 வருடங்கள் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் காலை 6 மணிமுதல் மாலை 6 மணி-வரையான நேரத்தில் பிரதி ஞாயிற்றுக்கிமைகளில் சென்று கையொப்பம் இடும் படியும் தவறும் பட்சத்தில் சிறைத் தண்டனை வழங்கப்படுமெனவும் கடுமையாக எச்சரித்துள்ளார்.

## மகாவலி ஆற்றில் நீராடிய இளைஞன் மாயம்

கண்டி தென்னக்கும்புர பகுதி மகாவலி ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

கண்டி பஹிரவகந்த பகதியை சேர்ந்த 21 வயதுடைய நீல் அந்தனி என்ற இளைஞரே இவ்வாறு நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மகாவலி ஆற்றில் நீராடிய நான்கு இளைஞர்களில் ஒருவரே காணாமல் போயுள்ளதாக பலகொல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை சுழியோடிகளின் உதவியுடன் பொலிஸார் காணாமல் போன இளைஞரை தேடி வருகின்றனர்.

# கொரிய மொழி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் விநியோகம்

கொரிய மொழி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நேற்று 20ஆம் திகதி காலை முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்ற மத்திய நிலை யத்திற்கு முன்பாக ஏராளமானவர்கள் குழுமி இருந்தனர்.

கொழும்பிலுள்ள 6 மத்திய நிலையங்களில் இது தொடர்பான அனுமதி பத்திரங்கள் நேற்று முதல் விநியோகிக்கப்படுகின்றன விண்ணப்பிக்க விரும்புவோர் இவற்றை 25 ஆம் திகதிவரை பெற்றுக் கொள்ளலாம்.

# திருகோணமலையில் தாதியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

திருகோணமலை பொது மருத்துவமனையில் தாதியர்கள் நேற்று 20ஆம் திகதி அடையாள சேவைப் புறகணிப்பை மேற்கொண்டனர்.

இந்தப்போராட்டம் நேற்று நண்பகல் 12 மணிவரை நடத்தப்பட்டதாக தாதியர்கள் அறிவித்துள்ளனர்

தமது பிரச்சினைக்கு தீர்வுக்கிடைக்காவிட்டால் தாம் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தாதியர்கள் ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவித்துள்ளனர்.

தமது சீருடையை அனுமதியின்றி சிற்றூழியர்கள் பயன்படுத்துவதை ஆட்சேபித்தே இந்த போராட்டம் நடத்தப்பட்டதாக தாதியர்கள் தெரிவித்துள்ளனர்.

## மன்னாரில் கடும் வரட்சி:

# கட்டுக்கரைக் குளத்தின் நீர் மட்டம் குறைகின்றது

**மன்னார்**

தற்போது நாட்டில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக் குளம் வற்றியுள்ளது.

சுமார் 162 குளங்களுக்கு நீரை வழங்கும் இக் கட்டுக்கரை குளமும் வற்றியுள்ளதனால் இதன் கீழ் இருக்கும் 24440ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு நெற்பயிர் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 9.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியே மன்னார் மாவட்டத்தில் காணப்பட்டது. அதன் பின்பு மழை பெய்யாததன் காரணமாக தற்போது கடும் வரட்சி நிலவுகின்றது.

கட்டுக்கரைக் குளத்தை நம்பி நெற்செய்கை விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் நீரை பெற்றுக் கொள்ள முடியாமல் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை மன்னார் பகுதிகளில் நன்நீர் மீன் வளர்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் மற்றும் சீலா மீனினங்கள் போதியளவு நீர் இல்லாமையினால் மீன்கள் இறந்விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மன்னார் பகுதிகளில் உள்ள சில குளங்களில் நீர் வற்றி விடும் நிலை ஏற்பட்டதனால் அப்பகுதி துர்நாற்றம் வீசும் நிலையும் காணப்படுகின்றது.

# வட மாகாண மெய்வல்லுநர் பயிற்சி முகாம் வட்டுக்கோட்டையில்

**தெல்லிப்பழை**

வடமாகாணகல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்திலிருந்துதேசியமட்டப்போட்டிக்கு தகுதி பெற்றவீர, வீராங்கனைகளுக்கானபயிற்சி முகாம் நேற்று திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆரம்பமாகியது. இது தொடர்ந்து நான்கு தினங் களுக்கு நடைபெறவுள்ளது.

நான்குநாட்கள் நடைபெறும் இவ் வதிவிடப்பயிற்சிமுகாமில் கொழும்பிலிருந்துவருகைதந்தமெய்வல்லுநர் பயிற்றுநர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

இப்பயிற்சிமுகாமில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மாவட்டங்களைச்சேர்ந்தமெய்வல்லுநர் வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## திருக்கேதீஸ்வர புனருத்தாரணம் இலங்கை-இந்திய உறவில் ஒரு மைல்கல்

சுமார் 36 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட இந்திய நிதியுதவியுடன் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன. முதற் கட்டப் பணிகள் நேற்று ஆரம்பமாகின. மூன்று வருடங்களுக்குள் இந்த முழுக் கட்டப் பணிகளும் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது இலங்கை - இந்திய நல்லுறவு வரலாற்றில் மற்றொரு கட்டமென்று கூறினால் அதில் தவறில்லை.

திருக்கேதீஸ்வரம் வரலாற்றுப் புகழ்மிக்க திருத்தலம். மக்களை மனிதப் பண்புகளோடு வளர்த்தெடுப்பதற்கு சமயங்கள் அளிக்கும் பங்கு மிக முக்கியமானவை. இதனால்தான் ஔவைப் பிராட்டியார் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறினார். கோயில்கள் இருந்த ஊர்களையும், அங்கு குடியிருந்த மக்களையும் கூட அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் அழித்திருக்கிறார்கள். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரிட்டிஷார் என இலங்கையை ஆட்சிசெய்த அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் இந்த நாட்டிலிருந்த பல புண்ணிய தலங்களை அழித்து நாசப்படுத்தியிருக்கிறார்கள். அதுபோல முப்பது ஆண்டுகால யுத்தத்தாலும் ஆலயங்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் என்று ஆண்டவன் சன்னிதானங்கள் பல தாக்கப்பட்டிருக்கின்றன; அழிக்கப்பட்டிருக்கின்றன. மதத் தலங்களை அழிப்பது மகா கொடூரமானது. மக்களை நல்வழிப்படுத்துவதில் சமயங்கள் வகிக்கும் பங்கு அளப்பரியது. குறிப்பாக இளைஞர்கள் தறிகெட்டுப் போகாமல், நெறி பிறழாமல் நீதிவழி நின்று செயற்படுவதற்கு வழிகாட்ட வேண்டியது சமயங்களினதும், சமயத் தலைவர்களினதும் கடமையாகும். இந்த வகையில் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனருத்தாரண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை நல்லதொரு விடயமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் மூன்று ஆயுதக் கிளர்ச்சிகளைச் சந்தித்திருக்கிறது. இரண்டு தென்னிலங்கையிலும் ஒன்று வடக்கு, கிழக்கு முனையிலும் நடந்திருக்கிறது. ஆயுததாரிகளுக்கு அரசியல் வழிகாட்டியதால் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் நடத்தப்பட்ட வன்செயல் போராட்டங்களே அவை. இந்த வன்செயல் சம்பவங்களோடு சம்பந்தப்பட்ட இளைஞர், யுவதிகளை சமய அறநெறி சார்ந்து வழிநடத்தியிருந்தால் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியிருக்காது.

திருக்கேதீஸ்வரம் கூட, ஆயுத தர்பார்கள் ஏற்படுத்திய அவலங்களைச் சந்தித்திருக்கிறது. மக்கள் மத்தியில் மத நம்பிக்கைகள் மேலுயர்ந்து காணப்படுமானால் அடாவடித்தனங்கள் அற்றே போய்விடும்.

இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் உள்ளன. திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் என்பவையே இந்த ஐந்துமாகும். விஜயன் இங்கு வந்தபோது அவனுடன் கூட வந்த உபதிஸ்ஸன் என்ற பிராமணர் இந்த ஐந்து ஈஸ்வரங்களையும் வழிபட்டாரென்று வரலாறு கூறுகிறது. திருக்கேதீஸ்வரம் பாடல் பெற்ற திருத்தலம். ஏழாம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்திநாயனாராலும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராலும் தேவாரப் பதிகம் பாடப்பட்ட திருத்தலம்.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக அழிவுற்றிருந்த இந்த ஆலயம், சுதந்திரத்தின் பின்னரான சுமார் மூன்று தசாப்த கால யுத்தத்திலும் அழிவுகளைச் சந்தித்தது. கி.பி. 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இந்த ஆலயம் சிதைவுற்றது. போர்த்துக்கேயர்கள் இந்த ஆலயத்தை இடித்துத் தகர்த்து எடுத்த கருங்கற்களைக் கொண்டு மன்னார் கோட்டையைக் கட்டினார்கள். கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து கி.பி.19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை இருந்த இடமே தெரியாமல் இருள் மண்டிப் போய் இருந்தது இந்தப் பாடல்பெற்ற திருத்தலம். இதேபோன்றுதான் மூன்று தசாப்த கால யுத்தமும் மீண்டும் திருக்கேதீஸ்வரத்தை இருள் மண்டச் செய்தது.

1990ஆம் ஆண்டு இரண்டாவது ஈழ யுத்தத்தையடுத்து திருக்கேதீஸ்வரம் தன் திருவை இழந்தது. சுமார் பன்னிரண்டு வருடங்கள் பூசை வழிபாடுகளே இல்லாமல் ஆலயம் சோபை இழந்து போனது. சுற்றாடல் பகுதிகளிலிருந்த மக்களும் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அன்று அழிவுற்ற ஆலயத்தை மீள நிர்மாணித்து அருள் வழங்க நாவலர் பெருமான் முன்முயற்சி மேற்கொண்டதைப் போன்று, மூன்று தசாப்த கால யுத்தம் முடிவதற்கு முன்னதாகவே திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிக்காக அளவற்ற பங்களிப்புச் செய்தவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள். 2005ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் குழுவொன்று ஆலயப் புனருத்தாரணம் சம்பந்தமான மதிப்பீட்டு அறிக்கையைத் தயார் செய்திருந்தது. இருந்தபோதிலும் அன்று நிலவிய யுத்தச் சூழ்நிலை திருப்பணி வேலைகளைப் பிற்போட நிர்ப்பந்தித்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது வெளியிடப்பட்ட கூட்டுப் பிரகடனத்தின் விளைவாகவே நேற்றைய புனருத்தாரண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆண்டவன் அருள் பாலித்தால் அநியாயங்கள் நிகழமாட்டா. புனருத்தாரணம் செய்யப்படும் திருக்கேதீஸ்வரம் எமது மக்களின் நல்வாழ்வுக்கு உதவுமென நம்புவோமாக.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# யுத்தத்துக்குப் பிந்திய புதுக்குடியிருப்பின் கதை

ஒரு வாரத்திற்கு முன்பு வவுனியா மாவட்டத்தில் உள்ள தேவாலயத்தில் வைத்து நாங்கள் சந்தித்த பத்துப் பெண்களில் ராஜினியும் (புனைபெயர்) ஒருவர். அந்த நேரத்தில் அவரும் அவரது இரண்டு குழந்தைகளும் மெனிக் பண்ணையில் உள்ள கதிர்காமர் முகாமில் தங்கியிருந்தார்கள். அந்தப் பெண்களும் அவரது குடும்பத்தினர்களும் 2008 முதலே இடம் பெயர்ந்து, புதுக்குடியிருப்பில் உள்ள அவர்களது வீட்டுக்குச் செல்லாமல் இருந்தனர்.

எங்களில் சிலர் இந்த சமூகத்தினரை பல வருடங்களாக நன்கு அறிவார்கள், அவர்கள் கிராமத்திலுள்ள வீடுகளையும், சொத்துக்களையும் பற்றிய நிச்சயமற்ற தன்மை இருந்த போதிலும், அங்குள்ள தங்கள் வீடுகளுக்கு செல்வதையே நினைத்து ஏங்கி வந்தார்கள்.

ராஜினியின் கணவர் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் மற்றும் புலிகளுக்கும் (எல்.ரீ.ரீ.ஈ) இடையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டத்தின்போது 2009 ஏப்ரல் 17இல் கொல்லப்பட்டு விட்டார். இப்போது 23 வயதாகும் அவரது மூத்த மகன், 2007இல் எல்.ரீ.ரீ.ஈ யின் கட்டாய ஆட்சேர்ப்புக்கு உள்ளானார். இரண்டு வருடங்களின் பின்னர், யுத்தத்தின் முடிவில், அவரும் மற்றும் முன்னைய எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களும் காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் காலி மாவட்டத்திலுள்ள பூசா தடுப்புக் காவல் மையத்துக்கு அனுப்பப் பட்டார்கள். ராஜினிக்கு 10 மற்றும் 6 வயதான மேலும் இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

எங்களது முந்தைய சந்திப்புகளின் போது, இந்தப் பெண்கள் தங்கள் கிராமத்தைப் பற்றிய தங்களது விருப்பத்துக்குரிய நினைவுகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டதுடன், தங்கள் சொந்த இடங்களான புதுக்குடியிருப்பு கிழக்கு மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்கு பகுதியிலுள்ள தங்கள் வீடுகளுக்கு செல்வதை எதிர்பார்த்து காத்திருந்தார்கள்.

ராஜினியும் மற்றும் அநேகரும் தங்கள் வீடுகளுக்கு செல்வதற்காக, மெனிக் பண்ணையிலுள்ள, கதிர்காமர் மற்றும் ஆனந்தகுமாரசாமி முகாம்களில் மூன்று வருடத்துக்கும் மேற்பட்ட காலத்தைக் கழித்துள்ளார்கள். ராஜினியும் மற்றும் பெண்களும் தங்கள் பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்தை அமைப்பதற்கு பாதுகாப்பான ஓரிடமாக தங்கள் வீடுகளை கருதி அங்கு திரும்பிச் செல்வதற்கே முன்னுரிமை வழங்கியிருந்தார்கள்.

மோதலின் இறுதிக் கட்டத்தின்போது அநேகமாக புதுக்குடியிருப்பில் இருந்த அநேக வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன. மற்றும் யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களின் பின்னர், எஞ்சியிருந்த ஏனைய வீடுகளும் குப்பைக் குவியலாக காட்சியளிக்கின்றன. கடுமையான எறிகணைத் தாக்குதல்களினால் பாடசாலைக் கட்டிடங்கள், மருத்துவமனைகள் மற்றும் தேவாலயங்கள் போன்றவைகளும் அழிக்கப்பட்டிருந்தன. இடப் பெயர்வின் விளைவாக தனியார் நிலங்கள் கைவிடப்பட்டிருந்தன. மற்றும் இந்த மூன்று வருட காலத்தில் குடியிருப்பு பிரதேசங்கள் யாவும் காடுகளாக மாறி விட்டிருந்தன.

இப்படியான இடத்துக்குத்தான் 2012 ஆகஸ்ட் 10இல் ராஜினியும் அவளது பிள்ளைகளும் வீடாக நினைத்து வந்து சேர்ந்தார்கள்.

சிறிய இடத்தை விரைவிலேயே நாங்கள் நெருங்கினோம். இதுதான் ராஜினியின் வீடாக இருந்தது. முட்களும், பற்றைகளும் காணப்பட்டன.

மீள்குடியேற்றப்பட்ட பிரதேசத்திலிருந்த மக்களிடம் நாங்கள் அவர்களை புகைப்படம் எடுக்க முடியுமா எனக்கேட்டோம். ராஜினியும் மற்றவர்களும் அதை வலியுறுத்தினார்கள், அவர்களின் கதைகளை நாங்கள் சொல்லவேண்டிய தேவை இருந்தது, அதனால் அவர்களின் போராட்டங்களை எங்களால் முடிந்தளவு புகைப்படத்தில் அடக்கிக் கொண்டோம். அது அவசரமாக தேவைப்படும் உதவிக்கான ஒரு மௌனமான விண்ணப்பம்.



ராஜினியுடன் சேர்ந்து சுமார் 200 குடும்பங்கள் மெனிக் பாமிலிருந்து புதுக்குடியிருப்பு வீடுகளுக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

முதலில் அவர்கள் அருகிலுள்ள பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டார்கள். அங்கு வைத்து மீண்டும் ஒருமுறை பதிவுகள் மற்றும் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர், இராணுவ அதிகாரிகளினால் அவர்கள் புகைப்படம் பிடிக்கப்பட்டார்கள். எல்லாக் குடும்பங்களும் முதல்நாள் இரவை அந்தப் பாடசாலையிலேயே கழித்தார்கள். அடுத்த நாள் 2012, ஆகஸ்ட் 11இல் அவர்கள் 10ஆம் வட்டாரத்திலுள்ள அவர்களது வீடுகளுக்கு திரும்பி அனுப்பப்பட்டார்கள்.

அந்தக் கிராமத்தில் நாங்கள் செலவழித்த இரண்டு நாட்களிலும், நிமிர்ந்து நிற்கும் ஒரு வீடுகூட எங்கள் பார்வையில் படவில்லை. மற்றும் அந்த சுற்றாடலில் எஞ்சியிருந்த கட்டிடங்கள் யாவும், கூரைகள் காணாமற்போயும், ஷெல் தாக்கிய சுவர்கள் மற்றும் உடைந்த கதவுகள், யன்னல்கள் எனப் போரின் அடையாளத்தை தெளிவாகப் பறைசாற்றின.

ராஜினி புதுக்குடியிருப்பிலுள்ள தனது வீட்டுக்குச் சென்ற மறுநாள் நாங்கள் அங்கு விஜயம் செய்தோம். பிரதான சாலை நெடுக இளம் பிள்ளைகள் உட்பட அநேகம் பேர், கொதிக்கும் சூட்டிலிருந்து தப்பிப்பதற்காக மர நிழல்களில் தரையில் படுத்திருப்பதை நாம் கண்டோம். அங்கிருந்த தண்ணீர் தாங்கி ஒன்றின் அருகே வந்து எங்களை சந்தித்த ராஜினி, தனது வீட்டை நோக்கி எங்களை நடத்திச் சென்றார்.

கடுமையான புதர்களுக்கு மத்தியில் சுத்தமாக்கப்பட்டிருந்த

இரண்டாம் நாள் தேவாலயத்தின் அருகிலிருந்த மக்களையும் நாம் சந்தித்தோம், வந்து எங்கள் வீடுகளையும் பாருங்கள் என்று அவர்களும் எங்களை அழைத்தார்கள். அவர்களது யதார்த்தமான கதை சொல்லப்பட்டு உண்மையை அனைவரும் அறியவேண்டும் என்பது வெகு தெளிவாகத் தெரிந்தது.

புதுக்குடியிருப்பில் மீள்குடியேற்றம் நடைபெற்ற மூன்று நாட்களின் பின்னர், ராஜினியிடமிருந்து எங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு கிடைக்கப் பெற்றது. அவர் எங்களிடம் சொன்னது, முதல்நாள் நாங்கள் விஜயம் செய்த வீடுகளுக்குள் ஒன்றிலிருந்து ஒரு வெடிக்காத நல்ல நிலையிலிருந்த கண்ணி வெடி ஒன்றும் அதனுடன் சேர்ந்த 32 துப்பாக்கி ரவைகளும் கண்டு பிடிக்கப்பட்டதாம், அந்தக் குடும்பம் தற்காலிக வதிவிடங்களை அமைப்பதற்காக காடுகளை துப்பரவு செய்து புதர்களுக்கு தீ வைத்த வேளையில் அந்த ரவைகள் வெடித்தனவாம்.

ராஜினியும் அவளது பிள்ளைகளும் போரின் போதே தங்களது உடமைகளில் பெரும்பகுதியை இழந்திருந்தனர் மற்றும் அவர்கள் தங்கள் வீட்டுக்கு திரும்பிச் செல்லும்போது, அவர்களால் காவிச்செல்லக் கூடியதாக இருந்தது அவர்களது அரிதான உடமைகளாக இருந்த சில துணிமணிகள், தகரங்கள், பானைகள் மற்றும் மெனிக் பண்ணையில் அவர்கள் வைத்திருந்த இதர பொருட்கள் மட்டுமே.

(7ஆம் பக்கம் பார்க்க)

# பொன்னாலையில் 21 குடும்பங்களுக்கு காணி உரிமைப்பத்திரங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம் பொன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக காணியற்ற நிலையில் வாழ்ந்துவந்த 21 குடும்பங்களுடைய காணிப்பிரச்சினைக்கு ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தீர்வு கண்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை பொன்னாலை பாபுஜி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இவ்வாறு தீர்வு காணப்பட்ட மக்களுக்கான காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. காணியற்ற நிலையில் இருந்த மேற்படி குடும்பங்கள் மிக நீண்ட காலமாக பொருளாதார அடிப்படையிலும் பின்தங்கிய நிலையில், தனியாரின் காணிகளில் வாழ்ந்து வந்தனர்.

இதனடிப்படையில் அவர்கள் தற்காலிகமாக வசித்து வந்த காணியின் உரிமையாளருடன் பேச்சுவார்த்தையை ஈ.பி.டி.பி. நடத்திவந்தது. காணி உரிமையாளர் கிருஷ்ணபிள்ளை பத்மநாதன் மனமுவந்து மிகக் குறைந்த விலையில் தனது காணியை வழங்கு வதற்காக ஒப்புக்கொண்டார்.

இருபத்தொரு குடும்பங்களுக்கும் தலா இரண்டு பரப்பு வீதம் காணி உரிமையாளரால் வழங்கப்பட்டது. அதற்குரிய காணி உறுதிப்பத்திரங்கள் இன்று வழங்கப்பட்டது. ஆவணங்களை பதிவு செய்வதற்கான செலவினை சொண்ட் உள்ளூர் தொண்டர் நிறுவனம் பொறுப்பேற்றுக்கொண்டது.

இன்று காணி உரித்து ஆவணத்தைப் பெற்றுக்கொண்ட மக்கள் இனி வருங்காலத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அனைத்து உதவித் திட்டங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தாம் முழுமையாக உதவுவதாக சந்திரகுமார் எம்.பி. உறுதியளித்தார்.

# யுத்தத்திற்குப் பிந்திய புதுக்குடி...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகரிடமிருந்து (யு.என்.எச்.சி.ஆர்.) மேலும் 20,000 ரூபா, இரண்டு தார்போலின் விரிப்புகள், ஒரு கத்தி, மற்றும் ஒரு மண்வெட்டி என்பனவும் கிடைத்தன. இரண்டு நாட்களின் பின்னர் யு.என்.எச்.சி.ஆர் லாரி ஒன்று புதுக்குடியிருப்பு தேவாலயத்துக்கு அருகில் வந்து, ஐந்து துண்டு பலகைகளும், மேலும் இரண்டு தார்போலின் விரிப்புகளையும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் விநியோகித்தது. ராஜினி 5,000 ரூபாவினை தனது இளைய மகனது படிப்புச் செலவுக்காக வங்கியில் வைப்பிலிட முடிவு செய்தார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் அவர்கள் ஒரு சிறப்பான வாழ்க்கை கிடைக்கும் என நம்பியிருந்தார்கள், மெனிக் பண்ணையில் இருந்து மற்றொரு இடம்பெயர்ந்தோருக்கான முகாமுக்கு செல்வதற்கோ அல்லது தங்கள் சொந்த வீடுகளை விட்டு வேறு இடங்களில் குடியமர்வதற்கோ அவர்கள் பிடிவாதமாக மறுத்துவிட்டார்கள்.

ராஜினியுடனும் அவரைப் போலுள்ள மற்றவர்களுடனும் அவர்கள் மெனிக் பண்ணையில் இருந்தபோது நாங்கள் அவர்களுடன் நேரத்தைச் செலவிட்டுள்ளோம், அதேபோல அவர்கள் புதுக்குடியிருப்புக்குச் சென்றபின்னரும் நாங்கள் அவர்களிடம் விஜயம் செய்தோம், மற்றும் தொடர்ந்து தொலைபேசியூடாக அவர்களுடன் தொடர்புகொண்டு வருகிறோம். இரவு நெடுநேரமாக அவர்களுக்கு எப்படி உதவி செய்யலாம் என்பதைப்பற்றி நாங்கள் எங்களுக்குள் பேசி வருகிறோம். எங்களது கலந்துரையாடல்கள் பெரும்பாலும் உதவியற்றதாகவும் மற்றும் சக்தியற்றதாகவுமே முடிவடைந்திருக்கின்றன. எனினும் ராஜினியுடையதும், மற்றவர்களினதும் கதைகளை எழுதிப் பகிர்ந்து கொண்டோம், அரசாங்கம் ஆகக்குறைந்தது இப்போதாவது விழித்துக்கொண்டு அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் நலன்களை பேணவும் வேண்டிய தனது கடமைகளை உறுதி செய்யும் என்று இன்னமும் நம்புகிறோம்.

மற்றும் சகல ஸ்ரீலங்கா வாசிகள் மற்றும் சர்வதேச சமூகத்தவர்கள் அனைவரும், தாங்கள் வீடு திரும்புவதற்காக அவர்கள் நடத்தும் போராட்டத்தில் சந்திக்கும் சவால்களைத் தீர்த்து வைப்பார்கள் என்று நாங்கள் தொடர்ந்து நம்புகிறோம்.

**றுக்கி;**
**நன்றி: இணையம்**

# இன்றைய சிந்தனை

**"எல்லாச் சாதனைகளும் - தொழிலுலகிலாகட்டும், அறிவு சார்ந்த உலகிலாகட்டும் அல்லது ஆன்மீக உலகிலாகட்டும் - திட்டமான முறையில் நெறிப்படுத்தப்பட்ட எண்ணங்களின் விளைவுகளே"**

நீங்கள் சாதிக்கும் எல்லாமும், நீங்கள் சாதிக்கத் தவறும் எல்லாமும், உங்கள் எண்ணங்களின் நேரடி விளைவுகளே. அறமுறையில் ஒழுங்கமைவு செய்யப்பட்ட இந்தப் பிரபஞ்சத்தில் - அவ்வொழுங்குச் சமநிலையின் இழப்பு இங்கே சர்வ நாசம் என்பதையே குறிக்கும். தனி மனிதப் பொறுப்பு அறுதிப் பூரணமானதாக இருக்க வேண்டும்.

உங்கள் பலவீனமும்-பலமும், உங்கள் சுத்தமும்-அசுத்தமும் உங்களின் சொந்தமானதுதானேயொழிய வேறு யாருடையதும் அல்ல. அவை உங்களால்தான் நிகழ்த்தப்படுகின்றன. வேறு யாராலும் அல்ல. அவற்றை உங்களால் மட்டுமே மாற்ற முடியும், வேறு யாராலும் அல்லவே அல்ல. உங்கள் வாழ்க்கை நிலையும் உங்களின் சொந்தமானதுதான்.

வேறு யாருடையதும் அல்ல. உங்கள் துன்பமும் மகிழ்ச்சியும் உங்களுக்குள்ளிருந்து பரிணாம வளர்ச்சி அடைகின்றன. நீங்கள் எவ்வாறு நினைக்கிறீர்களோ, அவ்வாறே இருக்கிறீர்கள். நீங்கள் எவ்வாறு தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அவ்வாறே தொடர்ந்து இருப்பீர்கள்.

பலமற்ற மக்கள் தாங்கள் உதவப்படுவதற்கு மனம் விரும்பினாலொழிய பலமுள்ள மனிதர்களால் அவர்களுக்கு உதவ முடியாது. அப்படியிருப்பினும் பலமற்ற மக்கள் தாங்களே பலமுள்ளவர்களாக மாற வேண்டும். அவர்கள் மற்றவர்களிடம் தாங்கள் கண்டு அதிசயிக்கும் வல்லமையை தங்கள் சொந்த முயற்சிகளால் தங்களுக்குள் விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

துன்புறுத்துபவர்கள் மற்றும் துன்புறுத்தப்படுபவர்கள் ஆகிய இருபாலாருமே ஒருவரையொருவர் கஷ்டப்படுத்துவதாகக் காணப்படும் அதே வேளையில், இருசாராரும் உண்மையில் தங்களைத் தாங்களே கஷ்டப்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு பரிபூரணமான அறிவானது துன்புறுத்தப்படுவோரின் பலவீனத்திலும், துன்புறுத்துபவரின் தவறாய்ப் பிரயோகிக்கப்பட்ட வலிமைச் சக்தியிலும் பிரபஞ்ச நீதியின் செயல்பாட்டைத் தெரிந்துணர்கிறது. ஒரு பரிபூரணமான அன்பானது இந்த இரண்டு நிலைமைகளுமே விளைவிக்கும் துன்பத்தைக் கண்டு இரண்டையுமே கண்டனம் செய்வதில்லை. ஒரு பரிபூரணமான கருணை துன்புறுத்துபவர் மற்றும் துன்புறுத்தப்படுபவர் ஆகிய இருவரையுமே அரவணைத்துக் கொள்கிறது.

பலவீனத்தை வெற்றி கொண்டு, தன்னல எண்ணங்கள் அனைத்தையும் புறந்தள்ளியிருப்பவர்கள் துன்புறுத்துபவர்களுடனும் சேர்ந்தவர்களில்லை. துன்புறுத்தப்படுபவர்களுடனும் சேர்ந்தவர்களில்லை. அவர்கள் சுதந்திரமானவர்கள்.

நமது எண்ணங்களை உயர்த்துவதன் மூலம் மட்டுமே நாம் உயரவும், வெற்றி கொள்ளவும் மற்றும் சாதிக்கவும் முடியும். நமது எண்ணங்களை உயர்த்த மறுப்பதன் மூலம் நாம் பலவீனமாகவும், கேவலமாகவும் மற்றும் பரிதாபகரமாகவும் மட்டுமே இருக்க முடியும்.

**ஜேம்ஸ் ஆலன்**



# கழுகுக் கனவுகள்

ஆகாயத்தில் உயரப் பறந்துகொண்டிருந்த போது தூரத்தில் இருந்த பல செய்மதிகளைப் பார்த்து எங்கள் நாட்டுக்கு மேலாகவும் ஒரு செய்மதியை நாம் வைத்திருந்தால் நல்ல என்று யோசித்தவாறு விண்வெளி ஆய்வுத் துறையில் முன்னணியில் இருக்கும் மொறட்டுவப் பல்கலைக்கழத்துக்குச் சென்று அங்குள்ள பேராசிரியர்களுடன் கலந்துரையாடிய போது நான் தெரிந்து கொண்ட தகவல்கள் இங்கு தருகிறேன்.

2015 ஆம் ஆண்டில் இலங்கைத் தொலைத்தொடர்பு செய்மதி ஒன்றைத் தயாரித்து அதனை விண்வெளிக்கு அனுப்பவுள்ளது. இந்தச் செய்மதியே தெற்காசியாவில் உள்ள மிகவும் நவீனமயமான தொலைத்தொடர்புச் செய்மதியாக விளங்கும் இந்தச் செய்மதி இப்பிராந்தியத்திலுள்ள தனியார் நிறுவனமொன்றுக்குச் சொந்தமானதாக இருக்கும்.

சுப்ரீம் சட் என்ற இந்த நிறுவனம் கண்டியில் ஏற்படுத்தப்படும் விண்வெளி நிலையத்திலிருந்து இந்தச் செய்மதியை இயக்கும். இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று (21) நேற்று இடம்பெற்றது. சீனாவின் கிரேட் வோல் இன்டஸ்ரிஸ் கோப்பரேசன் நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் வெங்ஜுவாங் மின் இது பற்றித் தகவல் தருகையில், இந்தச் செய்மதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் சீனாவில் கைச்சாத்திடப்படும் என்று அறிவித்தார்.

இந்த நிகழ்வில் இவ்விரு நாடுகளின் சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள். இதையடுத்து செய்மதியை நிர்மாணிக்கும் பணி அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகும்.

தற்போது இந்தியாவுக்கு ஐந்து தொலைத்தொடர்பு செய்மதிகள் இருக்கின்றன. பாகிஸ்தான் கடந்த ஆண்டில் ஒரு செய்மதியை தயாரித்து முடித்தது. இலங்கையில் சுப்ரீம் சட் நிறுவனம் இந்தத் தொலைத்தொடர்பு செய்மதியை 300 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் தயாரித்து முடிக்கவுள்ளது. இந்தச் செய்மதிக்கு z,c,ka என்ற மூன்று அலைவரிசைகள் இருக்கும்.

சீனாவில் பெஜீங் நகரில் இருந்து விண்வெளிக்கு அனுப்பப்படும் இந்தத் தொலைத்தொடர்பு செய்மதி இந்து சமுத்திரத்தில் இலங்கைக்கு மேலாக நிரந்தரமாக நிலைகொண்டிருக்கும். முதலீட்டுச் சபையின் கீழ் கண்டியில் நிறுவப்படும் சுப்ரீம் சட் தொலைத்தொடர்பு செய்மதியின் கட்டுப்பாட்டு நிலையம் கண்டியிலேயே அமைந்திருக்கும். இந்த நிலையத்தில் நவீன விண்வெளி தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். இவை விண்வெளியில் இருக்கும் எமது செய்மதியில் இருந்து 24 மணி நேரமும் தொலைத்தொடர்பு சம்பந்தப்பட்ட தகவல்களை வெளியில் அனுப்புவதற்கும், உள்வாங்குவதற்கும் பயன்படுத்தப்படும். இந்த முயற்சிக்கான முதலீடு 60 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்தப் பூமியில் உள்ள செய்மதி நிலையம் பல்லேகலையில் அமைந்திருக்கும். இந்த நிறுவனம் பாகிஸ்தானில் ஏற்படுத்திய செய்மதி நிலையத்தின் 80 சதவீதமான வெற்றிடங்கள் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

செய்மதிகள் பல்வேறு செயற்பாடுகளுக்காக உலகிலுள்ள வல்லரசு நாடுகளினால் பயன்படுத்தப்படுகின்றது. சில வல்லரசுகள் இன்னொரு நாட்டின் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் அந்த நாட்டின் இராஜதந்திர இரகசியங்களை பெறுவதற்காவும் இந்தச் செய்மதிகளை பயன்படுத்துகின்றன.

ஒரு நாட்டின் காலநிலை பற்றிய தகவல்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கும் செய்மதிகள் பேருதவியாக அமைந்துள்ளன. சூறாவளிக் காற்று, சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏற்படும் போது முன்கூட்டியே தகவல்களை பூமிக்கு அறிவித்து பூமியில் உள்ள மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கான அறிவித்தல்களை வழங்குவதற்கும் இந்தச் செய்மதிகள் உதவுகின்றன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை உலக நாடுகளுக்கு ஒளி, ஒலி பரப்புவதற்கும் இந்தச் செய்மதிகள் பேருருதவி புரியும். இலங்கை போன்ற சிறிய நாடுகள் வேறொரு நாட்டின் செய்மதிகள் மூலம் தொலைத்தொடர்பு மற்றும் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் காலநிலை அறிவித்தல்களை பெறுவதற்கு தொலைக்காட்சிகளுக்கு உரிமை கோரும் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு பெருமளவு கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.

ஆயினும் எங்களுக்கே சொந்தமான செய்மதிகள் இருந்தால் நாட்டின் தேவைகள் ஈடுசெய்வதற்கான தகவல்களை நாம் இலவசமாக பெற்றுக்கொள்வதுடன் இந்தச் சேவையை வேற்று நாடுகளுக்கு கொடுப்பதற்காக பெருமளவு பணத்தையும் வருமானமாகப் பெறலாம்.

இலங்கைக்குச் சொந்தமான செய்மதியை நாம் வைத்திருப்பதனால் விண்வெளி ஆராய்ச்சியில் நம்நாட்டு இளைஞர்களும், யுவதிகளும் கூடுதலான ஆர்வத்தைக் காட்டுவார்கள். இந்தியா ஏற்கனவே ஒரு விரரை விண்வெளிக்கு வெற்றிகரமாக அனுப்பிவைத்துள்ளது. கல்பனா என்ற இந்தியப் பெண் ஒரு தடவை அமெரிக்க விண்வெளி வீராங்கனையாக நாசா விண்வெளி நிலையத்திருந்து விண்வெளிக்குச் சென்று திரும்பியிருக்கிறார். அவரது இறுதி முயற்சியின் போது கல்பனாவும் அவருடன் சென்ற 4 விண்வெளி வீரர்களும் மரணமடைந்தார்கள். சுனீதா வில்லியம்ஸ் என்ற இன்னுமொரு இந்தியப் பெண் விண்வெளிக்கு இரு தடவைகள் வெற்றிகரமாகச் சென்று திரும்பியிருக்கிறார்.

இந்திய விண்வெளித் துறையில் சாதனைகளைப் புரிந்து வருகின்ற இவ்வேளையில் இலங்கை வீர, வீராங்கனைகளும் விண்வெளியில் சாதனை புரிய பின்நிற்கமாட்டார்கள். அத்தகைய சாதனைகளைப் புரிவதற்கு இலங்கைக்குச் சொந்தமான இந்தத் தொலைத்தொடர்பு செய்மதி ஒரு சிறந்த அடித்தளமாக அமையும் என்பது திண்ணம்.

இவ்விதம் ஒரு இலங்கை வீரர் அல்லது வீராங்கனை விண்வெளிக்குச் செல்லும் நாள் வரை இந்தக் கழுக்குக் கண்கள் கண்ணுறங்காது.

# தமிழர் வாழ தமிழ் போதுமா..?

தமிழுக்கு மிகுந்த சோதனைகள் வாய்த்துள்ளதாகத் திரும்பத் திரும்பக் குரல் எழுப்பப்பட்டு வருகிற ஒரு காலகட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். தமிழுக்கு அப்படி என்னதான் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று பார்ப்போம். ஒரு வகையில் பார்த்தால் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் தமிழ் பல ஏற்றங்களைக் கண்டிருக்கிறது. உலகெங்கிலும் சுமார் எட்டு கோடித் தமிழர்கள் இன்று வாழ்கிறார்கள். இவர்கள் அனைவருமே தமிழ் பேசத் தெரிந்தவர்கள். பல தலைமுறைகளாக வெளிநாடுகளில் தங்கி அந்நாட்டு மொழியையும் வேறு மொழிகளையும் கற்றுக் கொண்டுவிட்டு, தமிழைப் பயன்படுத்தவே முடியாத சூழலில் தமிழ் பேசாத தமிழர்களும் இருக்கிறார்கள். அவர்களின் மொத்த எண்ணிக்கை சில ஆயிரங்களைத் தாண்டாது என்று கொள்ளலாம். இப்படியொரு அதிக அளவில் தமிழ் பேசத் தெரிந்தவர்கள் தமிழினம் தொடங்கிய காலம் முதல் இப்போதுதான் இருக்கிறார்கள். உலக மக்கள் தொகை பெருக்கத்தின் நேரடி விளைவாகவும் இதனைப் பார்த்தால் இதற்கு தனிச்சிறப்பு இருப்பதாகவும் கொள்ளமுடியாது. ஆனால் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையும் இப்பொழுது உள்ள அளவிற்கு இதுநாள்வரை இருந்ததில்லை என்பதை ஒரு பலமாகவும் பார்க்கலாம். தமிழில் பத்திரிகைகள், புத்தகங்கள் எண்ணற்ற அளவில் ஆண்டுதோறும் பிரசுரமாகின்றன. தமிழ்புத்தகங்களின் மொத்த ஆண்டு விற்பனைத் தொகை ரூ.80 கோடியைத் தாண்டிவிட்டது. எட்டு கோடி தமிழர்களின் புத்தகச் செலவு இதுதான் என்று பார்க்கும் பொழுது இந்த தொகை அவ்வளவு பொருட்படுத்தத்தக்கதாக இல்லை என்று கூறலாம். ஆனால் இவர்களில் ஆறரை கோடித் தமிழகத் தமிழர்கள்தான் புத்தகங்களை அதிகம் வாங்கியவர்கள். அது சுலபமான யூகம்தான். தமிழகத் தமிழர்களிலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் இருபது சதவிகிதத்தினருக்கு மேற்பட்டவர்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களில் பலரும் புத்தகம் வாங்கும் பழக்கத்தை இன்னமும் கைக் கொள்ளாதவர்கள் என்றெல்லாம் பார்க்கும் பொழுது புத்தக விற்பனையின் ஏறுமுகம் நம்பிக்கை அளிப்பதாகவே உள்ளது. நூலகங்கள் தவிர ஒரு சிறுபான்மையினரே புத்தகங்கள் வாங்குகின்றனர் என்றாலும் தமிழ்ப் புத்தகம் வாங்குபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் பெருகி வருவதைக் கண் கூடாகப் பார்க்கலாம். தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் அதிகரித்து வருகின்றன. தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் கிடைத்துள்ளது. கணினியிலும் தமிழ் காலந்தாழ்த்தாது நுழைந்து விட்டது.

ஆனால் தமிழைக் கல்வி நிலையங்களில் கற்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இளைஞர்கள் விருப்புடன் தமிழைக் கற்பதில்லை. மேடைகளில், தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சி நடத்துபவர்கள் தமிழ் சொற்களைச் சரியாக உச்சரிப்பதில்லை. ஆங்கிலத்தை விரும்பி உபயோகிக்கும் தமிழர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இரண்டு தமிழர்கள் சந்தித்தால் அவர்கள் ஆங்கிலத்தில் உரையாடவே விரும்புகிறார்கள். தமிழ் மத்தியில் ஆட்சி மொழியாகவில்லை. தமிழ்நாட்டு பள்ளிக்கூடங்களில் தமிழ் போதிக்கப்படுவதில்லை. அவ்வாறே போதிக்கப்படும் இடங்களிலும் மேல்நிலை வகுப்புகளில் தமிழ் இடம்பெறுவதில்லை. அங்கெல்லாம் ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்துகிறது. குழந்தைகள் அப்பா அம்மா என்றெல்லாம் அழைக்காமல் டாடி, மம்மி என்று அழைக்கின்றனர். சுருங்கக் கூறினால் தமிழின் மிகப் பெரும் அச்சுறுத்தலாக ஆங்கிலம் கருதப்படுகிறது.

தனித்தமிழை வேண்டியவர்கள் வடமொழி மீதுதான் வெறுப்பு கொண்டிருந்தனர். ஆங்கிலத்தின் மீது அல்ல. இப்பொழுது குறைந்த அளவில் மட்டுமே வடமொழி தமிழுக்கு ஊறு விளைவிக்கும் மொழியாகக் கருதப்படுகிறது. வடமொழிச் சொற்களைத் தமிழில் கலக்கக்கூடாது என்பது பலரின் வேண்டுகோள். இந்த வேண்டுகோள் பெருமளவில் நிறைவேற்றப்பட்டதாகவே கொள்ளலாம். மணிப்பிரவாள நடை வழக்கொழிந்து போய்விட்டது. வட மொழிச் சொற்களுக்கு மாற்றான தமிழ்ச் சொற்களைப் பலரும் விருப்புடன் எடுத்தாளத் துவங்கிவிட்டனர். வட மொழியினால் தமிழுக்கு அபாயம் எதுவும் இல்லை. ஏனெனில் தமிழும் வடமொழியும் தனித்தனியேயான உள்ளார்ந்த குணங்கள் கொண்டவை. வடமொழியில் இதிகாசங்களும் வேதங்களும் வளர்ந்தன. தமிழில் இலக்கியங்களும் நீதி நூல்களும் படைக்கப்பட்டன. பக்தி இலக்கியங்கள் தோன்றும்வரை இந்த நடைமுறை இருந்திருக்கிறது. வட மொழி வழக்கொழிந்து போனதற்கும் தமிழ் இன்றளவும் மக்கள் மொழியாக இருப்பதற்கும் இவையும் கூட காரணங்கள் எனலாம்.

ஆனால் தமிழர்கள் தங்களுக்கு வைத்துள்ள பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமைகள் உள்ளன. இந்து சமயத்தைச் சேர்ந்த தமிழர்கள் இந்துக் கடவுள்களின் மற்றும் மகான்களின் பெயர்களைத் தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் வைப்பதால் அவை தமிழ்ச் சொற்களாக இருப்பதில்லை. பெரும்பாலும் அவை வடமொழி சார்ந்தவை. ஆனால் அப்பெயர்களை வைப்பவர்கள் சமய இறையுணர்வு காரணமாகச் செயல்படுகிறார்களேயன்றி அவர்கள் தமிழ் உணர்வற்றவர்கள் என்று கொள்வது தவறான கற்பிதம். தமிழர்களான இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சமணர்கள் போன்றோரும் தங்கள் இறைவழிபாட்டு பண்பினையொட்டி சமயப் பெயர்களைச் சூட்டுகிறார்கள்.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ a | ஆ ā | இ i | ஈ ī | உ u | ஊ ū |
| எ e | ஏ ē | ஐ ai | ஒ o | ஓ ō | ஔ au |
| க ka | ங ṅa | ச ca | ஞ ña | ட ṭa | ண ṇa |
| த ta | ந na | ப pa | ம ma | ய ya | ர ra |
| ல la | வ va | ழ ẕa | ள ḷa | ற ṟa | ன ṉa |
| ஜ ja | ஸ ṣa | ஷ śa | ஹ ha | க்ஷ kśa | ஸ்ரீ sri |

அப் பெயர்களும் அந்நிய மொழியிலிருந்து பெறப்பட்டவை. அவற்றுக்கும் மூலம் தமிழ் கிடையாது. கார்ல் மார்க்ஸ், சோக்ரடீஸ், இங்கர்சால் போன்ற அறிஞர்களின் பெயர்களை விரும்பி வைத்துக் கொள்பவர்களும் உள்ளனர். அப்பெயர்களும் தமிழ்ப் பெயர்கள் அல்ல. எனவே இந்துக்கள் மட்டும் தங்கள் இறை நம்பிக்கை அடிப்படையில் அமைந்த பெயர்களை அவை வடமொழி மூலம் கொண்டிருக்கின்றன என்கிற காரணத்தால் வைத்துக் கொள்ளக்கூடாது என்று கூறுவது எவ்வகையிலும் நியாயமானதல்ல.

அது போன்றே ஷ,ஜ,ஸ ஆகிய எழுத்துகள் வந்தால் அவற்றுக்குப் பதிலாக ச என்ற எழுத்தையும் ஹ வந்தால் அதற்குப் பதிலாக அ என்ற எழுத்தையும் போட்டு எழுதுகிற பழக்கம் தமிழ்ப் பற்றை நிரூபிப்பதாகக் கொள்வது. வடமொழியில் மட்டும் இன்றி இந்த எழுத்துகள் பாரசீகம், அரபு, ஆப்ரிக்க மற்றும் ஐரோப்பிய மொழிகளிலும் காணப்படுகின்றன. எனவே பிறமொழிச் சொற்கள் கொண்டுள்ள ஒலியினை வரி வடிவத்தில் தமிழில் தர வேண்டும் என்றால் இந்த எழுத்துகளைக் கட்டாயமாக நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இதை மொழி பெயர்ப்பு இலக்கியம் அசட்டை செய்ய இயலாது. ஷேக்ஸ்பியரை செகப்பிரியர் என்று எழுதுவதால் என்ன பயன்? இவரல்ல அவர் என்கிற முடிவிற்கு வருவதைத் தவிர? ஒருவரது பெயரையே ஒப்புக்கொள்ளாதவர்கள் அவருடைய படைப்புக்கு எத்தகைய நியாயத்தை வழங்கி விட முடியும்? நம் மொழிக்குப் பிறர் இத்தகைய சிதைவுகளைச் செய்தால் நாம் மனம் ஒப்புவோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆங்கிலேயர்கள் நம் ஊர் பெயர்களைச் சிதைத்ததை நாம் மீட்டெடுக்க முயற்சிக்கிறோம். தனித்துவம் மிக்க ழ என்கிற தமிழ் எழுத்து ஆங்கிலத்தில் டியு என்று எழுதப்படுவதைவிட ணாய என்று அதன் உச்சரிப்பு கெடாமல் வரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இதே ஆற்றலை நாம் மற்ற மொழிகளுக்கும் தர வேண்டுமல்லவா? வடமொழி உள்ளிட்டு எந்த மொழி மீதும் வெறுப்பினை வளர்த்துக் கொள்ளக் கூடாது. மொழிகள் பரஸ்பரம் கொள்கிற பாதிப்புகள் நாகரிகத்தின் அடையாளம். பிற மொழிகள் மீது பகைமை கொள்ளாதே பாப்பா என்கிற வரியையும் பாப்பா பாட்டில் சேர்த்துப் படிக்க வேண்டும்.

ஆங்கிலத்தைப் பொறுத்தவரை அதன் மீதான எதிர்கொளல் சிந்தித்துச் செயல்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. ஆங்கிலத்தை விரும்பிக் கற்பவர்களாயும் அதைப் பயன்படுத்துபவர்களாயும் உள்ள தமிழர்களை ஆங்கில மோகிகள் என்று வர்ணிப்பது பிழை. மோகம் என்பது பயனற்ற அர்த்தமற்ற விளைவுக்கு இட்டுச் செல்கிற மனோபாவத்தைக் குறிக்கும். தேர்ச்சி பெறுவதென்பது காலத்தின் இன்றியமையாமை ஆகும். ஆங்கிலத்தில் இரண்டு தமிழர்கள் ஒருவருக்கொருவர் ஆங்கிலத்தில் உரையாடுவது தவறு என்று பேசப்பட்டு வருகிற காலம் இது. ஆங்கிலத்தில் உரையாடினால் தமிழ் மெல்லச் சாகும் என்று சொல்லுமளவுக்குத் தமிழ் பலவீனமான மொழி அல்ல. தமிழர்களும் தமிழைத் தவிக்க விடுவதற்காக ஆங்கிலம் பேசுவதில்லை. தேவை கருதியும் தன்னம்பிக்கையின் அடையாளமுமாயும்தான் அவர்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். அவர்கள் முழுதும் ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருப்பதில்லை என்பதையும், அது இயலாத ஒன்று என்பதையும் கூட கவனிக்க வேண்டும். இன்று தமிழர்களின் சமூக, பொருளாதார நிலை உயர்ந்திருக்கிறதென்றால் அதற்கு மிக முக்கிய காரணம் ஆங்கிலக் கல்வி. தமிழர்களின் வாழ்வில் வளம் சேர்ப்பது ஆங்கிலம்தான். தமிழர்களாகிய நாம் நம்மிடையே உள்ள பிற வளங்கள் என்ன என்பதைப் பட்டியலிட்டுப் பார்க்க வேண்டும். நம்மிடம் இயற்கை வளங்கள் குறைவு. வற்றாத நதிகள் என்று எதுவும் இல்லை. குடிநீருக்கே பிற மாநிலங்களை யாசிக்க வேண்டிய நிலை. ஏற்றுமதி செய்யத்தக்க கனிமப் பொருட்களோ நுகர் பொருட்களோ கணிசமான அளவில் இங்கு கிடையாது.

நாடு என்ப நாடாவளத்தன நாடல்ல ஃ நாட வளம் தரும்நாடு என்றார் வள்ளுவர். நமக்கே இயற்கையாக வாய்க்கப்பெற்ற வளம்தான் நம்முடையது என்னும் பட்சத்தில் நம்மிடம் இருப்பதெல்லாம் மனித வளம்தான். நாம் மற்றவரிடமிருந்து எதையாவது பெறவேண்டுமென்றால் நாம் எதையாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமல்லவா? நம்மால் கொடுக்க முடிவது மனித வளத்தைத்தான். காலம் காலமாகத் தமிழர்களாகிய நாம் நம் உழைப்பைத்தான் மற்றவர்களுக்குக் கொடுத்து வந்திருக்கிறோம். பிஜி, ஆப்ரிக்கா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளுக்குக் கூலி வேலை செய்பவர்களைத் தருபவர்களாக தமிழகம் இருந்திருக்கிறது. ஆனால் இன்று அந்த அவல நிலை மாறி பிற நாடுகளுக்கு நாம் அறிவு சார்ந்த துறைகளில் வேலை செய்வதற்காக தமிழர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் காரணம் ஆங்கில அறிவுதான். ஆங்கிலத்தில் நம்மவர்கள் பேசவும் எழுதவும் பெற்ற தேர்ச்சியின் விளைவே இது.

இந்தத் தேர்ச்சியை நாம் எவ்வாறு பெற்றோம்?

பல வருடங்களாக ஆங்கிலம் கற்றுப் பேசி எழுதிப் பெற்ற தேர்ச்சி இது. எனவே ஆங்கிலத்தில் பேச தேர்ச்சி பெற வேண்டுமென்றால் தமிழர்கள் பிற தமிழர்களிடம்தான் பேச வேண்டும். தமிழ் தெரியாதவர்களிடம் மட்டுமே ஆங்கிலம் பேச வேண்டுமென்றால் இந்தத் தேர்ச்சி வந்திருக்காது. சிறு வயது முதல் ஆங்கிலம் படித்தாலும் ஆங்கிலமே பேசியிராதவர்கள் இருபது வயதுக்கு மேல் வேலை நிமித்தமாக திடீரென சரளமாக ஆங்கிலத்தில் உரையாட முடியுமா? மொழிப் பயிற்சி சிறு வயதிலிருந்தே வருவது நல்லது.

நான் மம்மி என்று கூப்பிடுகிறேன். அதனால் நீ கவுன் அணிந்து முள் கரண்டியால் எனக்கு ரொட்டியை ஊட்டு என்றெல்லாமா அக்குழந்தை தன் தாயிடம் கேட்கிறது? தமிழ் உணர்வுடன் பண்பாட்டுடன்தான் அக்குழந்தை பேசுகிறது. மம்மி என்பது அக்குழந்தையின் ஆங்கில மழலை. நீ எனக்கு அம்மா என்ற சொல்லைக் கற்றுக் கொடுத்தாய், நான் மம்மி என்ற சொல்லைக் கற்று வந்திருக்கிறேன் பார் என்று அது பெருமிதத்துடன் சொல்வதைத் தமிழுக்கு எதிரான செயலாகப் படம் பிடித்துக் காட்டுவதும் ஆங்கிலத்தை விட்டுத் தமிழில் பேசுகிற குழந்தைகளுக்கு அபராதம் போடுகிற ஆங்கில வழிக் கல்வி தரும் பள்ளி ஆசிரியர்களின் கொடூரமும் மொழி பற்றிய புரிதலின்மை என்கிற ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும். மம்மி, டாடி என்பதெல்லாம் சரி, நீ அம்மா அப்பா என்றுதான் கூப்பிட வேண்டும் என்று அன்பாகக் கூறினால் அக்குழந்தை ஒரே நொடியில் தன்னை மாற்றிக் கொள்ளும்.

ஆங்கிலம் தமிழ்ச் சமூகம் வளர்ந்துள்ளது. ஆங்கிலம் போன்ற ஒரு மொழியின் வளத்தையும் உபயோகத்தையும் அம்மொழி தரும் வாய்ப்புகளையும் தமிழ் தரவேண்டுமென விரும்பும் நாம் ஆங்கிலத்தை ஒதுக்கி வைப்பது கூடாது. இந்தியாவின் எதிர்காலத்தை தொலைநோக்குடன் பார்த்த காந்தி, நேரு, அம்பேத்கர், பெரியார் போன்றோர் நம்மை அடிமைப்படுத்தியவன் ஆங்கிலேயன் என்ற ஒரு காரணத்திற்காக ஆங்கிலத்தைப் பகைத்துக் கொள்ளுமாறு போதிக்கவில்லை. தலித் மக்களுக்கு ஆங்கிலக் கல்வி அவர்களது பின்தங்கிய நிலைகளிலிருந்து விடுதலையை அளிக்கும் என்று நம்பினார் அம்பேத்கர்.

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவரான பாரதிக்கு மட்டும் ஏனோ அச்சிறப்பு மிக்க கண்ணோட்டம் வாய்க்கவில்லை. ஆங்கிலக் கல்வியையும் ஏன், தன்னிடம் ஆங்கிலம் பேச வந்த தமிழர்களையும் சினந்தார் பாரதி. ஆங்கிலத் தேர்ச்சி மற்றும் பெற்றிராவிடில் பாரதி நவயுகத்தின் மகாகவியாக ஆகியிருக்க முடியாது என்பது நிச்சயம். ஜெல்லி, வால்ட் விட்மன் ஆகியோரின் நேரிடையான பாதிப்புகளுக்கு மட்டுமின்றி அவரது கவிதைகளில் இடம்பெற்ற முன்னோடியான சிந்தனைகளுக்கும் அவரது ஆங்கில அறிவே காரணம். கவிஞராக மட்டுமல்ல, ஒரு பத்திரிகையாளராக பாரதி ஆங்கில அறிவினால் அடைந்த பயன்களும் ஏராளம். ஆனால் பாரதி உட்பட அனைத்துத் தமிழர்களும் புத்திசாலிகள். அவர்கள் ஒருபோதும் மெய்யாக ஆங்கிலத்தைப் பகைத்துக் கொள்வதில்லை. தலைவன் முதல் தொண்டன்வரை ஆங்கிலத்திற்கு எதிராகப் பொது வெளிகளில் பேசுகிற அனைவரும் ஆங்கிலம் மீது விருப்பு கொண்டவர்கள். தங்கள் பிள்ளைகள் நன்கு ஆங்கிலம் கற்க வேண்டும் என்பதில் உறுதியானவர்கள். ஒரு பக்கம் வாழ்க்கை வெற்றிக்குத் தேவையான ஆங்கில அறிவை அடையும் முயற்சி. இன்னொரு பக்கம் தமிழ் பின்தங்கிவிடக்கூடாது என்று எண்ணிச் செயல்படுகிற தவிப்பு. இவைதான் தமிழனின் இன்றைய நிலை.

தமிழ் அசாதாரணமானதும் அற்புதமானதுமான ஒரு மொழி என்பதில் சந்தேகம் இல்லை. இத்தனை ஆயிரம் வருடங்களாக அது எத்தனையோ இடர்களைக் கடந்து இன்றும் இளமையுடன் தோன்றுகிறது. உலக ஓட்டத்துடன் தமிழ் தன்னைச் சளைக்காமல் இணைத்துக் கொள்கிறது. எந்த மொழியில் புதிய சொல்லாக்கங்கள் ஏற்பட்டாலும் அதற்குத் தமிழில் தக்க ஒரு சொல்லை உருவாக்கிவிட முடிகிறது. ஆனால் இதனால் நாம் எதையோ இழக்கிறோமோ என்றும் தோன்றுகிறது. ஆங்கில வழியில் வரும் சொற்கள் தான் தமிழில் மிகுதியாக இவ்வாறு மறு ஆக்கம் செய்யப்படுகின்றன. ஆங்கிலப் பதங்களுக்கு தமிழ்ச் சொற்களை உருவாக்குவது என்றில்லாமல் சுயமாக ஒரு கருத்துக்குத் தமிழில் சொல்லாக்கம் செய்வது என்பது அரிதாக உள்ளது. அவ்வாறு சமீபத்தில் வெற்றிகரமாகப் பெறப்பட்ட ஒரு சொல் திருநங்கை. நேரிடையாக பல ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழில் சொற்கள் உருவாக்கப்படுகின்றன. குதிரை பேரம், பங்குச் சந்தை வார்த்தைகளான கரடி, காளை, தொங்கு பாராளுமன்றம், ஓடு தடம், மென்பொருள், அலை வரிசை, கறுப்பு ஆடு, நீர்வீழ்ச்சி, தொலைக்காட்சி இப்படி ஏராளமான சொற்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனை நேரிடையாக இல்லாமல் பொருளை உள்வாங்கி உருவாக்கப்படும் சொற்களும் உள்ளன. நகை, முரண், புகைப்படம், பேருந்து, காசோலை, கணினி, வானொலி போன்ற பல சொற்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

அவ்வாறு இருவகையிலும் உருவாக்கப்பட்ட சொற்கள் கலைச் சொற்கள் போன்றவை. தமிழ் எழுத்து நடையில் இத்தகைய சொற்கள் நாளும் பெருகி வருவதைப் பார்க்க முடிகிறது. இன்னும் சில ஆண்டுகளில் இத்தகைய சொற்களின் வரத்து அதிகமாகி எழுத்து தமிழ் உருவாக்கப்பட்ட சொற்களின் கோவையாக விளங்கக்கூடும். பேச்சுத் தமிழுக்கும் எழுத்து தமிழுக்கும் மேலும் இடைவெளி இதனால் அதிகமாகும் என்பதோடு மட்டுமின்றி, இது நாள் வரை தமிழ் மொழி என்பது வாழ்விலிருந்து பெறப்பட்டது என்கிற வழக்கிலிருந்தும் மாறுபட்டதாகி தமிழுக்கு செயற்கைத் தன்மை வந்து சேரும். இது தமிழ் மட்டுமின்றி பிற இந்திய மொழிகளுக்கும்கூட பொருந்தும்.

இதற்கெல்லாம் காரணம் தமிழர்களாகிய நாம் உலகை ஆள்வதில் பங்கேற்பதில்லை என்பதுதான். பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றில் முன்னோடி அங்கம் ஏற்பதில்லை என்பதில் மட்டுமல்ல, அறிவு சார்ந்த இயக்கங்களையும் நாம் உருவாக்குவதில்லை. தமிழில் இலக்கியம் தவிர புதிதாக எதுவும் படைக்கப்படுவதில்லை. கண்டுபிடிப்புகள், கருத்தாக்கங்கள் அனைத்தும் நமக்கு மேற்கிலிருந்து வருகின்றன. நாம் அவற்றை நம் மொழியில் செவ்வனே பொருத்திக் கொள்கிறோம். அதற்கேற்ப மாற்றுச் சொற்களை உருவாக்கிக் கொள்கிறோம். சுயமாக கண்டுபிடிப்புகளும் கருத்தாக்கங்களும் தமிழர்களால் செய்யப்பட்டு அவை தமிழில் பதிக்கப்படும் வரை இந்த வறுமை நீடிக்கும். அதுவரை கோடிக்கணக்கானவர்களின் அன்றாட மொழியாகத் தொடர்ந்தாலும் தமிழ், மொழி சார்ந்த பெருமையில்தான் திளைக்க வேண்டியிருக்கும். நோபல் பரிசு பெற்ற தமிழ் விஞ்ஞானிகளான சி.வி.ராமன், எஸ்.சந்திரசேகர், வெங்கட்ராமன் ராமகிரு'ணன் ஆகியோர் தங்கள் ஆய்வுகளைத் தமிழிலும் எழுதி வெளியிட்டிருந்தார்களேயானால் இந்த நிலைமை மாறியிருக்கும். இனிவரும் காலங்களில் பல்துறை சார்ந்த தமிழ் அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளை ஆங்கிலத்தில் வெளியிடுகிற அதே சமயத்தில் சற்றும் காலம் தாழ்த்தாது தமிழிலும் வெளியிட்டால் அது ஒரு முன் மாதிரியான முயற்சியாகத் தமிழை உலகத்திற்கு எடுத்துச் செல்கிற செயலாக இருக்கும். இவ்வாறு செய்பவர்களுக்கு ஊக்கத்தொகை, விருது என்றெல்லாம் எதுவும் தரப்பட வேண்டியதில்லை. இயல்பான தமிழ் உணர்வு எல்லா தமிழர்களிடமும் செயல்பட வேண்டும்.

தமிழை மற்ற மொழிகளுடன் குறிப்பாக, ஆங்கிலத்துடன் போட்டியிடும் மொழியாகப் பாவிப்பதனால் தான் பல பிரச்சினைகள் எழுகின்றன. வேலை வாய்ப்புக்கும் வெளி உலகத் தொடர்புக்கும் தமிழ் உபயோகமாக இருக்குமா என்ற கோணத்தில் தமிழைப் பார்க்கக்கூடாது. அவ்வாறு தமிழ் இல்லாத பட்சத்திலும் தமிழ் நம் மொழி, அதை நன்கு கற்பது நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை உணர வேண்டும். தமிழ்நாட்டிற்குள் மட்டும் செயல்படுகிற நீதிமன்றங்கள், அரசு நிர்வாகங்கள் ஆகியன தமிழில் இருக்க வேண்டும்.

வருங்கால சந்ததியினருக்கு தமிழின்பால் தன்னார்வத்தை தூண்டுமாறு இன்றைய தலைமுறையினர் செய்யவேண்டும். தமிழ் படிக்க வரும் மாணவர்களை வேதனைப்படுத்தக்கூடாது. கடினமான தமிழைப் படிப்பதைவிட பிரெஞ்சு, வடமொழி ஆகியவற்றைப் படித்தால் சுலபமாக மார்க் வாங்கிவிடலாம் என்ற யதார்த்தத்தை மாற்றும் வகையில் தமிழ் படிப்பும் சுலபமாக இருக்க வேண்டும். தமிழை வைத்து தமிழ் மாணவர்களையே மிரட்டினால் பின்னர் அதைப் படிக்க வேறுயார் வருவார்கள்? பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இன்று இருப்பது போல் வெறும் இலக்கிய, இலக்கணப் படிப்பாக மட்டும் தமிழ் இருக்கக் கூடாது.

தமிழ் அதிகாரப்பூர்வ செம்மொழியாகி விட்டபடியால் உலகெங்கிலுமுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதை அரசாங்கம்தான் செய்ய வேண்டும் என்றில்லாது வசதி படைத்த தனியார்களும் செய்ய விரைந்து முன்வரலாம். தமிழைப் பரப்புவது என்பது தமிழைத் தமிழர்களின் எல்லைக்கு அப்பால் கொண்டு செல்வதாகும். தமிழைத் தமிழர் மட்டுமே படிப்பது, எழுதுவது என்றில்லாது தமிழைத் தமிழ் அல்லாதோரும் அறிந்து கொள்ளுமாறு செய்யவேண்டும். அதுவே தமிழருக்கும் தமிழுக்கும் பெருமை!.

- அம்சன் குமார்

# வெள்ளவத்தை கொலை சந்தேக நபரை வெளிநாட்டுக்கு தப்பிக்க விடவேண்டாம்

**- நீதிமன்றம் உத்தரவு**

வெள்ளவத்தை ராமகிருஷ்ணா டெரஸ் வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த முவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து காணாமற் போயுள்ள சந்தேக நபர் வெளிநாடுகளிற்கு செல்லாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எதிர்வரும் 27ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி வெள்ளவத்தை ராமகிருஷ்ணா டெரஸ் வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து தாய், தந்தை, மகள் ஆகிய மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இதன் போது அவர்களது மகன் ஒருவரே தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் ஹட்டன், கொட்டகலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அமெரிக்க உயர்மட்டக் குழுவினர் யாழ். அரசாங்க அதிபரை அரச செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

# அரசியல் கட்சிகள் சிலவற்றால் பொலிஸ் அதிகாரிகளுக்கு அழுத்தம்

மாகாணசபை தேர்தல்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் சில அரசியல்வாதிகளின் பாரிய அழுத்தத்துக்கு பொலிஸ் அதிகாரிகளும் தேர்தல் அதிகாரிகளும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது என தேர்தல் கண்காணிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் கடமையிலுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அரசியல் தலையீடின்றி தமது கடமையை செய்ய அனுமதிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு கோரி அவர்கள் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோனுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

கட்சி ஒன்றின் பிரசாரத்தில் பயன்பட்ட வாகனம் ஒன்றிலிருந்து தேர்தல் பிரசார ஸ்டிக்கர் ஒன்றை அகற்றிய இரத்தினபுரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை அப் பகுதி சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் பயமுறுத்தியதாக "பவ்ரல்" அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி கூறினார்.

"நாம் இந்த சம்பவத்தை பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளோம். தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயாராக பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர். இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்" என ஹெட்டியாராச்சி கூறினார்.

அரச வளங்களின் பயன்பாடு, சட்டத்துக்கு புறம்பான கட்அவுட்டுகள், அனுமதிக்கப்படாத இடங்களில் சுவரொட்டி ஒட்டுதல் என்பன அநேகமாக காணப்படும் தேர்தல் சட்ட மீறல்களாக உள்ளன.

# வடக்கு, கிழக்கில் யுத்தம் நிலவ வேண்டும் என்பதே சம்பந்தனின் எதிர்ப்பார்ப்பு

**மஹிந்தானந்த அலுத்கமகே**

நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டு தமிழ் மக்கள் துயரப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தனதும் அக்கட்சியினரதும் தேவையாகும் என அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிலைமை காணப்பட்டாலேயே புலம்பெயர் தமிழர்களின் பெருந்தொகைப் பணம் மாதாந்தம் இவர்களுக்கு கிடைக்கும்.

எனவே, அபிவிருத்தி மிகுந்த ஆட்சியினை பாதுகாக்க கிழக்கு தமிழ் மக்கள் முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தமிழில் உரையாற்றினார்.

# பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கொழும்பில் 138 இலக்க வழித்தட தனியார் பஸ்களின் பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவித்தார்.

சாரதி ஒருவரின் அனுமதிப்பத்திரம் தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸாருடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இன்று திங்கட்கிழமை காலை 138 இலக்க வழித்தட தனியார் பஸ்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில் அந்த இடத்திலேயே அபராதச்சீட்டு வழங்க பொலிஸார் ஒப்புக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# வட மாகாண ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

**சவால்கள் குறித்தும் சுட்டிக்காட்டு**

வட மாகாண அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் உள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாத்தில் உள்ள 12 வலயங்களைச் சேர்ந்த 250ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டு தாங்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தனர்.

போருக்குப் பிந்திய காலப் பகுதியில் ஆசிரியர்களுக்கு பிரச்சினைகள் சம்பள முரண்பாடுகள், பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப்பணிகளில் ஈடுபடுபவர்கள் மீது மேற்கொள்ப்படுகின்ற அதிகாரங்கள், ஆசிரியர்களின் இடமாற்றம் என்பன பற்றி இங்கு விவாதிக்கப்பட்டன.

அத்துடன் வடமாகாணத்தில் உள்ள கல்வித்துறை சார்ந்தவர்களின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குவதில் பாரிய நெருக்கடிகளை ஆசிரியர்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டும் இங்கு முன்வைக்கப்பட்டது.

# தூக்கில் தொங்கிய நிலையில் முதியவரின் சடலம் மீட்பு

கோப்பாய் தெற்கு காளிகோவிலுக்கு அருகில் உள்ள வீட்டில் முதியவர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் நேற்றுத் திங்கள்கிழமை தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஞானமுத்து ஞானையா (வயது 64) என்பவரே இவ்வாறு தூக்கில் தொங்கி மரணமடைந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இவரது மரணம் தொடர்பான விசாரனைகளை கோப்பாய் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

# எரிகாயங்களுடன் அனுமதிக்கப்பட்டோரில் நால்வர் யாழ். வைத்தியசாலையில் மரணம்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் தீ விபத்துக்களில் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 4 பேர் மரணமடைந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் புள்ளிவிபரத்தரவுகள் தெரிவித்துள்ளன.

தீயினால் ஏற்பட்ட விபத்துக்கள் காரணமாக 8 பேர் கடந்த வாரம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர் களில் 4 பேர் மரணமடைந்தனர் என அந்தத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன

குடும்பப் பிரச்சினைகள் காரணமாகவே இந்த தீ விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பொலிஸ் பிரிவு மேற்கொண்ட விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 3 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



மன்னாரில் நிலவிவரும் கடும் வரட்சியான காலநிலை காரணமாக அங்கு நீர்நிலைகள் வற்றி வரண்டுபோய் காணப்படுகின்றன. படத்தில் மன்னாரிலுள்ள மிகப்பெரிய குளமான கட்டுக்கரைக்குளம் வற்றிபோய் இருப்பதைப் காணலாம். (மன்னார் நிருபர்)

# கிணற்றில் தவறி விழுந்து முதியவர் பரிதாப மரணம்

யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள வீடு ஒன்றில் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் போது தவறி வீழ்ந்து முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக யாழ்.பொலிஸார் திங்கட்கிழமை தெரிவித்தனர்

சின்னத்தம்பி யோகேஸ்வரி (வயது 76) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கிணற்றிலிருந்து மீட்டு எடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிந்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ் முதியவரின் சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆரோக்கிய நாதம்

# வயிற்றில் சங்கடம்



இரைப்பை வயிறு அழற்சி Gastritis எனப்படும். இதன் பெயரை வைத்து பலர் இதை வாய்வுத் (Gas) தொல்லை என்று நினைக்கிறார்கள். இல்லை, இது இரைப்பையில் ஏற்படும் வீக்கம். அல்சர் வருவதற்கு முன் ஆரம்பமாகி, அல்சரில் கொண்டு விடும். இந்த வீக்கம் அழற்சி, இரைப்பையின் சுவர்களில் உருவாகும். Gastritis என்பது ஆயுர்வேதத்தில் அமில பித்தம் எனப்படும்.

**காரணங்கள்:**

☼காரம், மசாலா நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல். உணர்ச்சி வசப்படுகின்றமையாலும் கூட வயிற்றில் அமிலத்தை அதிகம் சுரப்பிக்கும்.

☼தொற்றுகளினால் (Infection). பக்டீரியா, வைரஸ், ஃபங்கஸ் கிருமிகளால் வரும். பெயர் பெற்ற ஹெலிகோ பேக்டர் பைலோரி (Helicobacter Pylori) என்ற பயங்கர வாத ரகத்தை சேர்ந்த வலுமையான பக்டீரியா காஸ்டிரைடீஸையும் உண்டாக்கும், பிறகு அல்சரையும் உண்டாக்கும். நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த பக்டீரியா தொற்று வர வாய்ப்புகள் அதிகம். இந்த நோய்களால் இரைப்பைக்கு போகும் இரத்தம் குறைந்த விடுவதால், வயிற்றுப் பிரச்சனைகள் ஏற்படும்.

☼உடலின் நோய் தடுப்பு சக்தி குறைந்துவிட்டாலும் கஸ்டிரைடீஸ் வரும்.

☼சில நச்சுப் பொருட்களை உண்ணுதல், ஆஸ்பிரின், ப்ரூஃபென் போன்ற மருந்துகளாலும் வரும். மூட்டுவலி, முதுகுவலி, தலை-வலி, இவற்றுக்காக எடுத்துக் கொள்ளும் மாத்திரைகள் வயிற்றை பாதிக்கும் பக்க விளைவுகள் உள்ளவை. இவற்றால் கஸ்டிரைடீஸ் வரும். இந்த மாத்திரைகள், இரைப்பையின் சுவற்றிலுள்ள ப்ரோஸ்டா கிளான்டின் (Prostaglandin) என்ற ஹார்மோன் போன்ற வேதிப் பொருள் வற்றிப்போய் விடும். இதனால் ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு புண்கள் உண்டாகின்றன. புண்கள் தீவிரமாகி, அல்சராக மாறிவிடுகின்றன.

☼திருப்பி, திருப்பி சொல்வது, மன இறுக்கம், பரபரப்பு, மனஅழுத்தம், இவை காரணமாகலாம். காரணங்களை பொறுத்து கஸ்டிரைடீஸ் பலவகைகளாக சொல்லப்படுகிறது.

**அறிகுறிகள் / சிக்கல்கள்:**

☼கஸ்டிரைடீஸ் காண்பிக்கும் அறிகுறிகள் குறைவு. அறிகுறிகள் தோன்றினால் அவை - வலி, பிரட்டல், வாந்தி. இவற்றை நாம் அஜீரணம் என்றும் நினைப்போம். கஸ்டிரைடீஸ் அல்சராக முன்னேறும் போது அறிகுறிகள் தீவிரமாகும்.

☼இரைப்பை அல்சரை உருவாக்குவது கஸ்டிரைடீஸ். இதை அல்சரின் முன் நிலை என்றே கூறலாம்.

**சிகிச்சை:**

அலோபதி முறையில் எச்.பைலோரியை அழிக்க நோய் எதிர்ப்பு மாத்திரைகள் தரப்படுகின்றன. அன்டாசிட் அமிலத்தை எதிர்க்கும் மருந்துகள் தரப்படும். அலுமினியம் ஹைட்ராக்ஸைட் பொதுவாக பயன்படும் ஆன்டாசிட். இதை விட பயன் அளிப்பது மக்னீஷயம் ஹைட்ராக்ஸைட். சிறுநீரக கோளாறுகள் உள்ளவர்களுக்கு மக்னஷயம் ஹைட்ராக்ஸைட் குறைவாகத் தான் கொடுக்க வேண்டும். பல அன்டாசிட் மருந்துகள், அலுமினியம் மற்றும் மக்னீஷயம் ஹைட்ராக்ஸைடுகள் இரண்டும் கலந் தவை.

**ஆயுர்வேத அறிவுரைகள்:**

☼மிளகாய், மசாலா, புளி, ஆரஞ்ச், சாத்துக் குடி, இவற்றை ஒதுக்கவும்.

☼பூண்டு, இஞ்சி, மல்லி, சீரகம் இவற்றின் உபயோகத்தை குறைக்கவும்

☼அப்பளம், சட்னி, ஊறுகாய் - தவிர்க்கவும்.

☼பால் நல்லது.

☼உயிர்சத்து சி நிறைந்த நெல்லிக்காய், கரட் எடுத்துக் கொள்வது நல்லது. கஸ்டிரைபீஸ் நோய்க்கு பீடா காரேடீன், உயிர் சத்து சி சேர்ந்த உணவுப் பொருட்கள் தேவையான மருந்தாகும்.

☼புகையிலை, மது தவிர்க்கவும்

☼மன அமைதி தேவை.

**ஆயுர்வேத மருந்துகள்:**

☼அதிமதுரம் கஸ்டிரைடிஸை கட்டுப்படுத்த, பல தலைமுறைகளாக பயன்படுத்தப்படும் மருந்து. இது எச். பைலோரி பாக்டீரியாவையும் வளரவிடாமல் தடுக்கும். ஒரு தேக்கரண்டி அதிமதுரப் பொடி, 1/2 தேக்கரண்டி நெய், 1 தேக்கரண்டி தேன் இவற்றை கலந்து வெறும் வயிற்றில் உட்கொள்ளவும் தினசரி 2 வேளை போதுமானது.

எந்த மருந்தானாலும், உங்களின் ஆயுர்வேத மருத்துவரின் ஆலோசனைப் படி உட்கொள்ளவும்.

வயிற்றை துன்புறுத்தும் எச்.பைலோரி ஹெலிகோபேக்டர் பைலோரி (Helicobacter Pylori) என்ற பாக்டீரியா கஸ்டிரைபீஸ் பாதிப் புக்கு முக்கிய காரணம். தவிர பெப்டிக் அல்சருக்கும், இந்த கிருமியே காரணம்.

எச்.பைலோரி கிருமிகள் இரப்பையின் ம்யூகோஸா என்ற ஜவ்வுப்படலத்தில் புகலிடம் தேடி வசிக்கின்றன. இந்த சவ்வுப் படலத்தால் கிருமிகளுக்கு ஹைட்ரோகுளோரிக் அமிலத்தால் பாதிப்பு ஏற்படுவதில்லை. அமிலம் சுரக்கும் போதெல்லாம் எச். பைலோரி, சவ்வுப் படலத்தை துளைத்து, உள்புறச் செல்களுக்குள் பாதுகாப்பாக ஒளிந்து கொள்கின்றன. தவிர யூரிஸ் (Urease) என்ற நொதியை (Enzyme) உண்டாக்குகின்றன. இதிலிருந்து வெளிப்படும் அம்மோனியாவுடன் ஹைட்ரோகுளோரிக் அமிலம் சேர்ந்து, நீர்த்துப் போய் விடுகிறது. இதனால் அமில ஆபத்தின்றி, தங்குதடையின்றி எச்.பைலோரி எல்லையில்லாமல் இனப்பெருக்கம் செய்கின்றன.

இந்த கிருமிகள் ஏற்படுத்தும் ஒட்டைக ளினால் ரத்தக்கசிவு ஏற்படுகி றது. அட்ரோபிக் (Atrophic) கஸ்டிரைடிஸ் ஏற்படுகிறது. இரத்த சோகையும் ஏற்படும்.

எச்.பைலோரிகிருமியுள்ள அனைவருக்கும் கஸ்டிரைடீஸ் ஏற்படும். முழுவயிற்றையும் பாதிக்கலாம். இல்லை வயிற்றின் கீழ் பாகத்தை (Antrum) பாதிக்கலாம். கஸ்டிரைட்டீஸ், அல்சராக மாறி நாளடைவில் புற்று நோயாக மாறும்.எச்.பைலோரியை அழிப்பதற் கான வழி - அமில சுரப்பை கட்டுப்படுத்தும் மருந்துகளுடன் இரண்டு நோய் எதிர்ப்பு (அமோக்ஸிலின், க்ளரித்ரோமை சின்) மருந்துகள் கொடுப்பது தான்.

எச்.பைலோரி நமது விரல்களில் நகங்களின் இடுக்கில் இருக்கும் அழுக்கில் காணப்படுகிறது. அசுத்தமான குடிநீர், ஈ மொய்க்கும் தெருவோர உணவுக் கடைகள் இவற்றிலிருந்து எச்.பைலோரி பரவும்.

---

# சருமத்திற்கேற்ற உணவு

சருமப் பாதுகாப்புக்காக எண்ணற்ற கிரீம்களும், தைலங்களும், லோஷன்களும் வந்து விட்டன. ஆனால் வாழ்நாள் முழுவதும் சருமம் மாசு, மருவன்றி ஒளிர வேண்டுமென்றால், புற உடலுக்கு மட்டுமன்றி, உடலுக்குள்ளும் ஆரோக்கியம் நிலவ வேண்டும். இதற்கு ஆயுர்வேதம், சமச்சீர் உணவு, சரியாக ஜீரணமாதல் மற்றும் சரிவர கழிவுப் பொருட்களின் வெளியேற்றம் - இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.



சரி, ஆயுர்வேதம் பரிந்துரைக்கும் உணவுமுறைகளை பற்றி தெரிந்து கொள்ளும் முன்பு, நீங்கள் எந்த வகையை சேர்ந்தவர் என்பதை - அதாவது வாத, பித்த, கப வகைகள் தெரிந்து கொள்ளுங்கள். இதை தெரிந்து கொண்டவுடன் கீழ்க் கண்ட யோசனைகளை கடைப் பிடித்துப் பாருங்கள்.

**வாத சரும பாதுகாப்பு:**

வாத பிரகிருதிகளின் சருமம் நன்றாக போஷிக்கப்பட வேண்டும். சருமத்தை போஷிக்க அடிப்படை எண்ணைகளும், மூலிகைகளையும் கலந்து உபயோகிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த வகை சருமம், விரைவில் சுருக்கங்கள் ஏற்பட்டு முதுமையை அடைந்து விடும்.

சரியான உணவு, நல்ல தூக்கம் இவைகள் இருக்க வேண்டும். சாதாரணமாக வாத பிரகிருதிகள் விரும்புவது எண்ணைப் பசையுள்ள உணவுகள், இனிப்புகள், புளிப்பு, உப்புள்ள உணவுகள். பால், முழுத் தானியங்கள், பச்சை காய்கறிகள், கீரைகள் முதலியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளவும். பழச்சாறுகள் வயிற்றை சுத்தம் செய்யும். பசு நெய், முடிந்தால் ஒலிவ் எண்ணை இவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளவும். ஈரத்தைக் காக்கும் மூலிகைகளை பயன்படுத்தவும். முகத்தை அடிக்கடி தண்ணீரால் கழுவவும். குடிக்க தினமும் வெந்நீரை பயன்படுத்தவும். கருமிளகு, இஞ்சி, மஞ்சள் இவற்றை அளவோடு உபயோகிக்கவும்.

**பித்த சரும பாதுகாப்பு:**


இந்த வகை சருமத்திற்கு போஷாக்கும் தேவை, உடலை குளிர்விப்பதும் தேவை. இனிப்பு, கசப்பு, துவர்ப்பு ருசியுள்ள உணவுகள் இவர்களுக்கு பிடிக்கும். கார சார உணவை தவிர்க்கவும். பழரசங்கள், ரோஜா குல்கந்து முதலியவற்றை உட்கொள்ளவும். பித்த சருமம் உணர்வுத்திறன் கூடியதானதால் வெய்யிலில் அலைவதை தவிர்க்கவும். காரமான மசாலா கலந்த உணவுகளை தவிர்க்கவும். இவை தோல் எரிச்சலை உண்டாக்கும்.

**கப சருமப் பாதுகாப்பு:**

பெருஞ்சீரகம், அதிமதுரம் பயனளிக்கும். குடிப்பதற்கு சாதாரண குளிர்ந்த நீரை பயன்படுத்தவும். இவர்களுக்கு எண்ணைப் பசை குறைந்த உணவுகள் ஏற்றது. கசப்பு, துவர்ப்பு, கார சுவையுள்ள உணவுகள் உண்ணலாம். இஞ்சி, மஞ்சள், லவங்கம், கருமிளகு உணவில் இடம் பெறட்டும். தினசரி உடற்பயிற்சி நல்லது. இஞ்சி சாற்றுடன் எலுமிச்சை சாற்றை கலந்து உணவுக்கு முன் குடிக்கவும். குடிப்பதற்கு வெந்நீரை பயன்படுத்தவும்.

**மூன்று வகையினருக்கும் பொதுவான உணவுகள்:**

கீரை எல்லாவித சருமத்திற் கும் நல்லது. நீராவியில் வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். கீரைகள் போலவே கரட்டும் எல்லாவித சருமத்திற்கும் உகந்தது.



பசும்பால், நெய், குங்குமப்பூ, ஏலக்காய் இவற்றை தினசரி இர வில் எடுப்பது நல்லது. பழங்கள் அனைத்து சருமங்களுக்கும் நல் லது. அவை தோலுக்கு ஈரப் பசையை உண்டாக்குகின்றன. மல்லி, சீரகம் எல்லா சர்ம படைப்புகளுக்கும் நல்லது.

ஆரோக்கிய சருமத்திற்கு கீழ் கண்டவற்றை தவிர்க்கவும்

ரொட்டி சார்ந்த உணவுகள், கோதுமை வெள்ளை மா, டின் மற்றும உடன் தயாரிப்பு உணவுகள், கெட்டுப்போன உணவுகள், சவ்வரிசி, வினிகர், ஈஸ்ட், பாட்டில் குளிர்பானங்கள், மிளகாய், புளி, அதிகமாக எள். மாட்டு மாமிசம், இறால். வறுத்த, பொரித்த உணவுகள், கொழுப்பு நிறைந்த உணவு கள்.

பூனை கூட மதில் மேலிருந்து ஒரு இடையன்மேல் குதித்து, அவன் தோளில் தன் கூரிய நகங்களைப் பதித்துவிட்டது. அவன் கோரமாகக் கூச்சலிட்டான். இப்படிச் சிறிது நேரம் ஆனபின், மனிதர்கள் "செத்தேன் பிழைத்தேன்' என்று அந்த முற்றத்தை விட்டு வெளியேறி வெளிக் கதவுப் பக்கம் ஓடிவிட்டார்கள். படையெடுப்பு தொடங்கி ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே அவர்கள் தோற்றுவிட்டார்கள். அவமானம்! தோற்றுப்போன அவர்கள் வந்த வழியியே ஓட்டம்பிடித்தார்கள். வாத்துகள் கூச்சலிட்டுக் கொண்டே அவர்களுக்குப் பின்னால் ஓடிச்சென்று அவர்களைக் கொத்தின. ஒருவனைத் தவிர எல்லா மனிதர்களும் போய்விட்டார்கள். முற்றத்தில் பாக்ஸரின் குளம்புக்குப் பலியான பையன் மட்டும் அப்படியே குப்புறக் கிடந்தான். பாக்ஸர் அவனைப் உருட்டி திருப்ப முயன்றது. ஆனால் பையன் அசையவேயில்லை. அவன் இறந்து விட்டான் பாவம்!' என்று துயரத்துடன் சொன்னான் பாக்ஸர்.





"அவனைக் கொல்கிற உத்தேசமில்லை எனக்கு. என்காலில் இரும்புக் கவசம் இருந்தது எனக்கே ஞாபகம் இல்லை. வேண்டுமென்று நான் இதைச் செய்யவில்லை என்று யார் நம்பப் போகிறார்கள்".


"தோழரே! இரக்கமோ பரிதாபமோ வேண்டாம்' என்றது ஸ்நோபால். அதனுடைய முதுகுக் காயங்களிலிருந்து ரத்தம் இன்னும் வழிந்து கொண்டிருந்தது. "யுத்தம் என்றால் யுத்தம்தான். மனிதர்களில் நல்லவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் செத்தவர்கள்தான்' என்றது அது. "எதையும் நான் சொல்லவிரும்பவில்லை. என் எதிரியான மனிதனைக்கூட நான் கொல்ல விரும்பவில்லை' என்றது பாக்ஸர். அதன் கண்களில் நீர் ததும்பியது. "மாலி எங்கே, காணவில்லையே?" என்று ஒரு மிருகம் விசாரித்தது. உண்மையில் மாலியைத்தான் காணவில்லை. ஒரு விநாடி அங்கே ஒரே கலவரமாகப் போய்விட்டது. மனிதர்கள் ஓடிப போகும்போது மாலியையும் கடத்திக்கொண்டு போயிருப்பார்களோ என்று சந்தேகம் வந்துவிட்டது எல்லோருக்கும். அல்லது ஏதாவது தீங்கு விளை வித்திருப்பார்களோ அதற்கு? கடைசியில் தேடிப்பார்த்தபோது மாலி வைக்கோல் போருக்குள் தலையை விட்டுக் கொண்டு பயத்தால் நடுங்கிக் கொண்டு நிற்பது கண்டுபிடிக்கப் பட்டது. துப்பாக்கி வேட்டு வெடித்ததும் பயந்து ஓடிவிட்டது அது. அதைத் தேடிக் கண்டுபிடித்தபின் மிருகங்கள் வெளி முற்றத்துக்கு வந்து பார்த்தபோது அடிபட்டுக் கிடந்த பையனைக் காணவில்லை.

(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



## எதுவும் வேலை!




ஒருவன் தன் கழுதை மேல் சுமை ஏற்றிக் கொண்டிருக்கும் போது எதிரிகள் வருவதைப் பார்த்தான். பயந்துபோய் "கழுதையே வா! நாமிருவரும் ஓடிப்போய்விடலாம். எதிரிகள் வருகிறார்கள்" என்றான்.

கழுதை, "நான் வரவில்லை. நீ ஓடு!" என்றது.

"ஏன் கழுதாய்?"

"எதிரிகளுக்கும் பொதி சுமக்கத்தானே போகிறேன். உன்னுடன் வந்தால் எனக்கு சுமை குறையப் போகிறதா?" என்றது.





## விடை சொல்லுங்கள்!

ஒரு பனை மரத்தில் ஏற முற்படும் ஓணான் ஒன்று ஒரு மணித்தியாலத்தில் ஒரு சாண் ஏறி நான்கு விரல் கீழே சறுக்கி இறங்கிவிடும். இவ்வாறு ஏறும் ஓணான் எத்தனை மணித்தியாலங்களில் 32 முழம் உயரமான பனை மரத்தில் ஏறி முடிக்கும்?

# சிறுவர் அமுதம்

## எமது நாடு

இந்து சமுத்திரத்திலே ஒரு தீவாகக் காணப்படுகின்ற இலங்கையானது, இந்திய தீபகற்பத்திற்கு தெற்கே அமைந்துள்ளது. அது மத்திய கோட்டிற்கு வடக்கே 5° 55' மற்றும் 9° 55' இடையேயும், கிழக்கு நிலநடுக்கக் கோட்டிற்கு 79° 42' மற்றும் 81° 52' இடையேயும் அமைந்துள்ளது. இதன் மொத்த நிலப்பரப்பு 65,610 சதுர கிலோ மீட்டராகும்.

445 கிலோ மீட்டர் நீளம், 225 கிலோ மீட்டர் அகலத்தால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள இந்த நிலப்பரப்பினுள் அழகான வறள் வலய கடற்கரை, கண்கவர் விருட்சங்கள், புராதன தாது கோபுரங்கள் போன்றன காணப் படுவதுடன் அனைவரும் விரும்பத்தக்க அழகான கண்கவர் காட்சிகளால் நிரம்பி வடிகின்றன. 2500 மீட்டரை விடவும் உயரமான பல மலைத் தொடர்கள், அதைச் சுற்றியுள்ள சமவெளிகள் என்பவற்றையும் கொண்டுள்ளது. தென்னை மரங்கள் நிரம்பிய கடற்கரையால் சூழ்ந்து காணப் படுகின்றன.

## விடுகதைகள்




1.சின்னப்பயல் உரசினால் சீறிப் பாய்வான் - அது என்ன?

2.கொத்துக் கொத்து ஈச்சங் காய் கோடாளி ஈச்சங்காய் ஊருக்கு போனாலும் வாடாது ஈச்சங்காய் அவர் யார்?

3.யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?

4.வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?

5.அடிக்காமல், திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார்?

விடைகள்: 1.தீக்குச்சி 2.பற்கள் 3.கண் இமை 4.ஆறு 5.வெங்காயம்

**சுடோக்கு எண் 33 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 4 | 2 | 6 | 1 | 8 | 9 | 7 |
| 1 | 6 | 8 | 9 | 7 | 5 | 3 | 2 | 4 |
| 7 | 9 | 2 | 8 | 3 | 4 | 6 | 5 | 1 |
| 8 | 5 | 6 | 4 | 9 | 2 | 1 | 7 | 3 |
| 2 | 7 | 3 | 6 | 1 | 8 | 9 | 4 | 5 |
| 4 | 1 | 9 | 3 | 5 | 7 | 2 | 8 | 6 |
| 6 | 2 | 1 | 7 | 4 | 9 | 5 | 3 | 8 |
| 9 | 4 | 5 | 1 | 8 | 3 | 7 | 6 | 2 |
| 3 | 8 | 7 | 5 | 2 | 6 | 4 | 1 | 9 |

**சுடோக்கு எண் 34**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 4 | | | | |
| 3 | 9 | | | | 7 | 1 | | |
| | 8 | | 5 | | | | | 9 |
| | | | | | 1 | 3 | | 4 |
| 8 | | | 9 | | 6 | | | 2 |
| 1 | | 7 | 2 | | | | | |
| 2 | | | | | 8 | | 9 | |
| | | 8 | 6 | | | | 7 | 1 |
| | | | | 9 | | | 8 | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# ஆண்டு தோறும் 5 இலட்சம் பேரைப் பலியெடுக்கப் போகிறது
# காலநிலை மாற்றம்




இன்றைய அறிவியல் உலகில் சூழல் சமநிலையின்மையே பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகின்றது. இதனால் புவியின் வெப்பம் அதிகரித்தல், கடல் மட்டம் உயர்வடைதல், பனிப்பாறைகள் உருகுதல் போன்றவற்றால் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதன் உட்பட விலங்குகளின் பட்டினி மரணங்கள் என எதிர்விளைவுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

கடந்த 2007 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பால் வெளியிடப்பட்ட ஆய்வறிக் கையில் மனிதனால் மேற்கொள்ளப்படும் நடவடிக் கைகளால் இயற்கைக்கு முரணாக காலநிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதன்விளைவாக, 2010ஆம் ஆண்டு முதல் உலகமெங்கும் ஆண்டுதோறும் 5 இலட்சம் பேர் பலியாக இவை காரணமாக விருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது.

எனினும், இக்கணக்கெடுப்புக்கு முன்னரே, 2000ஆம் ஆண்டு முதல் உலகமெங்கும் ஒரு இலட்சத்து 60 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பல்வேறு வகையான அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் எனச் சொல்லப்படும் செல்வந்த நாடுகளே அதிகளவு பாதிப்புக்களுக்குக் காரணமாக இருக்கின்றன. ஆனால் இதன் எதிர்விளைவுகளை குறிப்பாக, தென்கிழக்கு ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களைச் சேர்ந்த மக்களே இவற்றின் தாக்கங்களை அதிகம் சந்திக்கின்றனர்.

கைத்தொழில் மயமாக்கல் நடவடிக்கைகளால் பெருமளவு எரிபொருட்கள் தகனமாக்கப் படுவதாலும், சூழலின் செயற்கை, இயற்கை கழிவுகளின் அளவுகள் அதி-



கரித்து வருகின்றமையாலும் வளியில் சாதகமான அமைப்பு பாரியளவு மாற்றம் காணுகின்றன. மேலும் எரி-மலை வெடிப்பு போன்ற அனர்த்தங்களில் காபனீரொட்சைட்டு ($Co_2$), ஐதரோகாபன்கள், கந்தக ஒட்சைட்டுகள், நைதரசனின் ஒட்சைட்டுகள், திண்ம, திரவக் கழிவுத் துணிக்கைகள் போன்ற வளியில் சேர்ந்து சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

இதேவேளை, காபனீரொட்சைட் வளியில் சாதகமான மட்டத்திலிருக்கும் போது உயிரினங்களின் வாழ்விற்கு மிக முக்கியமாகும். அதாவது விலங்குகளின் சுவாசத்தில் வெளிவிடும் $Co_2$ வாயுவை தாவரங்கள் ஒளித்தொகுப்புக்காக உள்ளெடுக்கப்படுவதனால் இதன் மட்டம் வளியில் மாறாது பேணப்படுகின்றது.

ஆனால் தொழிற்சாலை, வாகனம் போன்றவற்றில் வெளியாகும் நச்சுப்புகைகள், அனல் மின் உற்பத்தி நிலையங்கள், குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள குளிரூட்டி, வளி பதனமாக்கி போன்றவற்றின் அதிகரித்த செயற்பாடுகளால் காபனீரொட்சைட்டின் சமனிலை பாதிப்படைகின்றது. குளோரோபுளோரோ காபன்கள் வளிமண்டலத்துடன் சேர்வதால் வளியின் சமனிலை குழப்பமடை-கின்றது.

வளிமண்டலத்தில் வாயுக்களின் செறிவு அதிகரிப்பதனாலேயே சூழல் வெப்பநிலை அதிகரிப்பதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இதனால் பனிபாறைகள் உருகுவதால், கடலை நதிகள் வந்தடைதல் குறையும், கடல்நீர் நிலத்தினுள் புகுவதால் குடிநீரின் அளவு குறையும். வெள்ளமும், வரட்சியும் போட்டி போட்டுக்கொண்டு ஏற்படும்.

அதேபோல், ஓசோன் படை துவாரங்கள் ஏற்படுகின்றமையால் புற ஊதாக் கதிர்கள் வந்தடை-கின்றன. இதனால் கண், தோல் என்பன மிகவும் பாதிக்க ப்படுகின்றன. தாவரங்களின் ஒளித்தொகுப்பை பாதிக்கச் செய்கின்றன. போன்ற பல எதிர்தாக்கங்கள் ஏற்படுகின்றன.

அதேவேளை, பச்சைவீட்டு விளைவினாலும் புவி அதிகளவு வெப்பமடைகின்றது. அதாவது, பட்டினியைப் போக்குவதற்காக ஏற்பட பசுமையை புரட்சியால் சூழலின் சமனிலை பாதிக்கப்ப ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சூழலின் சமனிலை மாற்றமடைவதனால் மழைநீரில் காபனீரொட்சைட் கரைக்கப்பட்டு, அமிலத் தன்மையடைந்து அமில மழையாக உருவாகின்றது. இதனால் காடுகள், நீர் நிலை கள், விலங்குகள் என்பன பாதிக்கப்படுகின்றன. மண்ணில் அமிலத் தன்மை அதிகரிப்பால் தாவரங்கள், கனியுப்புக்களை அகத்துறிஞ்சுவது தடைப்படுகின்றது.

எனவே, உலக உணவு உற்பத்தி பல மடங்காக பாதிக்கப்படுவதால் அபிவிருத்தி யடைந்த நாடுகள் கூட பட்டினி மரணங்களுக்கு முகங்கொடுக்கும். புற காரணிகளின் தாக்கங்கள் குறைவாகக் காணப்படும் போது மண்ணின் பண்பு இயற்கையாகவே இருக்கும்.

மனித நடவடிக்கைகளும் சில இயற்கையான செயற்பாடுகளுமே மண்ணின் தரத்தை நலிவடையச் செய்கின்றன. அதேபோல உயிரங்கிகள் உயிரற்ற சூழுலுடன் சீரான தொடர்புகள் காணப்பட்டால் மட்டுமே சூழற்றொகுதிகள் சமனிலையில் காணப்படும். ஆனால் இன்று இவற்றுக்கிடையே சீரான உறவு காணப்படுவதில்லை.

கடந்த இரு நூற்றாண்டுகளாக அதிகரித்த கைத்தொழில் புரட்சி, அறிவியல் வளர்ச்சி என்பன காரணமாக மனித சனத்தொகை யில் பாரிய மாறுபாடுகள் ஏற்பட்டு, பிறப்பு வீதம் உயர்ந்த அதே வேளை இறப்பு வீதம் குறைவ டைந்துள்ளது.

இதனால் காடழிப்பு, நீர்பாசன வேளாண்மை அதிகரிப்பு, நகர, கைத்தொழில் மயமாக்கல் போன்ற சீரற்ற பரம்பல் உட்பட விலங்கு, தாவர பல்வகைமையும் சீரற்ற பரம்பலும் சூழல் சமன-லை இன்மைக்கு வழிகோழியது.

எனவே. விஞ்ஞானப் புரட்சிக-ளால் ஏற்பட்ட தற்போதைய நன்மைகளை மட்டும் பெருமை பேசிக் கொண்டிராது, எதிர்காலங்களில் இத்தகைய நவடிக்கைகளால் உருவாகப் போகும் தீங்குகளையும், எதிர்விளைவுகளையும் கருத்திற் கொண்டு, ஆராய்ந்து அவற்றிற்கு தீர்வு காணப்பட்டால் மட்டுமே உயிரினங்களின் இருப்பு நிலைமைகளுக்கு புவிக்கோளம் நிலை கொண்டிருக்கும்.

*எஸ். தேவராஜா*


# ஊர்காவற்றுறையில் சமய சொற்பொழிவுகள்

உடுவில்

இந்து சமய கலாசார அலுவ ல்கள் திணைக்களமும் நாரந்த னை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மும் இணைந்து மஹோற்சவ காலத்தில் சிறப்புச் சொற்பொழி வுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 21ம் திகதி முதல் 31ம் திகதிவரையும் மாலை 7.30 மணிமுதல் 8.30 மணி வரையும் யாழ் இந்து கலாசார அபிவிரு த்தி உதவியாள் த. பிரதீஸ் வரன் தலைமையில் நடைபெற வுள்ளன.

21ம் திகதி சைவப்புலவர் நித்தியதசிதரன் 'சைவ வாழ்வு' என்னும் விடயத்திலும், 22ம் திகதி சைவப்புலவர் இந்த சத்தியதாசன் ஆலய வழிபாடு ஏன்? என்னும் விடயத்திலும், 23ம் திகதி சைவப்புலவர் பொன் சுகந்தன் "இந்துமதம் காட்டும் ஆன்மீகம்" என்னும் விடயத் திலும், 24ம் திகதி சைவப் புலவர் கந்த சத்தியதாசன் "திருமுறையும் வாழ்வும் என்னும் விடயத்திலும், 25ம் திகதி சைவப்புலவர் கமலநாதன் "கிர-ியைகளின் பயன்" என்னும் விடயத்திலும், 26ம் திகதி இளம் சைவப்புலவர் கைலைநாதன் "வேகம் தடுத்தாண்ட" என்னும் விடயத்திலும், 27ம் திகதி சைவ ப்புலவர் கமலநாதன் "எண்ணு வார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்னும் விடயத்திலும், 28ம் திகதி இளம் சைவப்புலவர் கைலைநாதன் "ஆர்பெறுவார் அச்சோவே" என்னும் விடயத் திலும், 29ம் திகதி சைவப்புல வர் பொன் சுகந்தன் "கேட்டவரம் அருள்வாள் அம்பிகை" என்னும் விடயத்திலும், சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.



வவுனியாவில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் ஜீவனோபாயத்தை முன்னே ற்றுவதற்காக ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவி வழங்கத் தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அமைப்புகளுடனான ஒப்பந்தத்தில் ஜப்பானிய தூதுவர் நொபுஹிட்டோ ஹோபோ நேற்று கையெழுத்திட்டார். கொழும்பு - 7, மெயிட்லண்ட் கிறசன்ட்டிலுள்ள ஜப்பானிய தூதுவரின் வாசஸ் தலத்தில் இவ்வைபவம் இடம்பெற்றது.

# வலை வீசி பிடித்து அழிக்கும் முயற்சியை ஒபாமா உடனடியாகக் கைவிட வேண்டும்



ஜூலியன் அசாஞ்ச்

என்னை வலை வீசி பிடித்து அழிக்கும் முயற்சியை அமெரிக்க அதிபர் ஒபாமா உடனடியாக கைவிட வேண்டும் என்று விக்கி லீக்ஸ் இணையதள நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் கூறினார். விக்கிலீக்ஸ் இணையதளத்தின் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் (41), இணையதளத்தில் அமெரிக்காவின் இராணுவ ரகசியங்களை வெளியிட்டு உலகம் முழுவதும் பரபரப்பு ஏற்படுத்தினார். இதனால், அசாஞ்ச் மீது அமெரிக்கா கடும் கோபம் கொண்டது. இதற்கிடையே, சுவீடனில் 2 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ததாக அசாஞ்ச் மீது வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில், அசாஞ்ச் கடந்த ஜுன் 19ஆம் திகதி, லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார். அவருக்கு அந்நாடு அரசியல் அடைக்கலம் தந்துள்ளது. இந்நிலையில் அசாஞ்ச் நேற்று தூதரகத்தின் மாடியில் இருந்தபடி வெளியில் நின்றிருந்த பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சரியான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

என்னை வலை வீசி பிடித்து அழிக்கும் எண்ணத்தை கைவிட வேண்டும். விக்கிலீக்ஸ் ஆனாலும் சரி, நியூயார்க் டைம்ஸ் ஆனாலும் சரி. உண்மையான தகவலை வெளியிடும் மீடியா மீது தொடுக்கப்படும் அடக்கு முறையை அமெரிக்கா நிறுத்த வேண்டும். ஈக்வடார் அரசு, அந்நாட்டு மக்கள், நீதிக்காக போராடும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த அனைவருக்கும் நன்றி. இவ்வாறு அசாஞ்ச் கூறினார். அசாஞ்சை அமெரிக்காவிடம் ஒப்படைக்க மாட்டோம் என சுவீடன் உறுதியளித்தால் இப்பிரச்சினையில் ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைக்கு தீர்வு கிடைக்கும் என்று அசாஞ்சுக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர்.

# உலக பார்வை

## குர்றான் பக்கங்களை எரித்ததாக 11 வயது கிறிஸ்தவ சிறுமி கைது

பாகிஸ்தானில் குர்றான் பக்கங்களை எரித்ததாக 11 வயது கிறிஸ்தவ சிறுமியை பொலிசார் கைது செய்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் செக்டார் ஜி-12 பகுதியில் உள்ளது உமரா ஜாபர்.இந்த பகுதியில் வசிக்கும் 11 வயது சிறுமி ரிம்ஷா மசி. கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த இந்தச் சிறுமி, புனித குர்றான் புத்தகத்தின் பக்கங்களை எரித்ததாக சயத் முகமது உம்மத் என்பவர் பொலிசில் புகார் செய்தார். இதையடுத்து ரம்னா பொலிஸ் நிலையத்தில் எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டு, ரிம்ஷாவை பொலிசார் நேற்று கைது செய்தனர். இது குறித்து பாகிஸ்தானில் கிறிஸ்தவர்கள் என்ற அரசு சாரா தொண்டு நிறுவனத்தினர் கூறுகையில், டவுண் சிண்ரோம் என்ற மூளை வளர்ச்சி குறைபாட்டால் சிறுமி அவதிப்பட்டு வருகிறாள். மேலும் சிறுமி மீது பொய் புகார் கூறப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் செக்டார் ஜி- 12 பகுதியில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் வீடுகளை தீயிட்டு கொளுத்துவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். அதனால் பீதி அடைந்த பலர் வீட்டை காலி செய்துவிட்டு வெளியேறி உள்ளனர். பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தேசிய நல்லிணக்கத் துறை அமைச்சர் பால்பட்டி உத்தரவிட்டுள்ளார்.

# ஈக்வடார் தூதரகத்தின் மீது கை வைத்தால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்

பிரிட்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தின் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அந்நாடு கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஈக்வடாரின் நட்பு நாடுகள் எச்சரித்துள்ளன. விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு பிரிட்டனில் உள்ள ஈக்வடார் தூதரகம் அடைக்கலம் அளித்துள்ளது. அவரைக் கைது செய்ய பிரிட்டன் பொலிஸார் தூதரகத்துக்கு வெளியே காத்திருக்கின்றனர். மேலும் அதிரடியாக உள்ளே நுழைந்து அசாஞ்சேவைக் கைது செய்யவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இது குறித்து ஆலோசிக்க தனது நட்பு நாடுகளுக்கு ஈக்வடார் அழைப்பு விடுத்திருந்தது. வெனிசுலா தலைமையிலான நட்பு நாடுகள் இதில் கலந்து கொண்டன.

ஈக்வடாரின் கயாகுல் நகரில் இச்சந்திப்பு நடந்தது. இதில் கலந்து கொண்ட கூட்டணி நாடுகள் பிரிட்டனை எச்சரித்தன. ஈக்வடார் தூதரகத்தின்மீது நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் பிரிட்டன் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் தெரிவித்தன. தென்னமெரிக்கக் கண்டத்தில் உள்ள பிராந்திய நாடுகளும் ஈக்வடாருக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால் தூதரகத்தை விட்டு வெளியேறினால் அவர் கைது செய்யப்படுவார் என்ற நிலை நீடித்து வருகிறது.

நட்பு நாடுகள்

## சீக்கிய கோவிலில் துப்பாக்கி சூடு:

# குடும்பத்தினரைச் சந்திக்கிறார் மிச்ஷெல்

அமெரிக்காவில் குருத்வாரா சீக்கிய கோவிலில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் பலியான நபர்களின் குடும்பங்களை சந்தித்து ஆறுதல் கூறவிருக்கிறார் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்ஷெல் ஒபாமா. விஸ்கான்சின் மாகாணம் ஒக்கிரீக் பகுதியில் உள்ள சீக்கிய குருத்வாராவில், கடந்த 5ஆம் திகதி வேட் மைக்கேல்பேஜ் என்பவர் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதில் 6 பேர் பலியானார்கள். பின்னர் பேஜ் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக



அமெரிக்க தேசியக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிட ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் 6 பேரின் குடும்பத்தினரையும் மிச்ஷெல் ஒபாமா சந்தித்துப் பேசவிருக்கிறார். இதுகுறித்து சீக்கிய கவுன்சிலின் தலைவர் ராஜ்வந்த் சிங் கூறுகையில், மிச்ஷெல் ஒபாமா பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினரை சந்திக்க விருப்பதாக தெரிவித்துள்ளது எங்களை நெகிழ வைத்துள்ளது. அவரது முடிவை நாங்கள் மதிக்கிறோம், வரவேற்கிறோம். அவரது சந்திப்பு, தங்களது குடும்ப உறுப்பினர்களைப் பலி கொடுத்து விட்டு தவித்துக் கொண்டிருக்கும் உள்ளங்களுக்கு பெரும் ஆறுதலாக, ஆதரவாக அமையும். மிச்ஷெல் ஒபாமாவும், ஜனாதிபதி பராக் ஒபாமாவும் எங்களுக்கு ஆறுதலாக நிற்பது, பரிவு காட்டுவது ஒட்டுமொத்த அமெரிக்க சீக்கிய சமுதாயத்தினரையும் நெகிழ வைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.




குடும்பத்தினருடன் தேவாலயத்திற்கு வழிபாட்டுக்குச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

## நடுவானில் சென்ற விமானம் திடீரென கடலில் விழுந்து விபத்து: அமைச்சர் பலி

பிலிப்பைன்ஸ் நாட்டில் நடந்த விமான விபத்தில், அந்நாட்டின் உள்துறை அமைச்சர் ஜெஸ்சஸ் ரோபிரிடோ(வயது 54) பலியானார். இவர் தனது ஆய்விற்காக உதவியாளர்கள் நான்கு பேருடன் சிறிய ரக விமானத்தில் சென்றார். நடுவானில் சென்று கொண்டிருந்த போது, மத்திய கடலின் 350 கி.மீ தொலைவில் மாஸ்பாதே பகுதியில் விமானம் விழுந்து விட்டதாக தகவல் வெளியாகி உள்ளன. கடலில் மூழ்கியதால் சோனாகிராப் உட்பட நவீன தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்தி, 300இற்கும் மேற்பட்ட வீரர்கள் விமானத்தை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து ஜனாதிபதி பெனிக்கோ அகிஹினோ, செல்வாக்குமிக்க அமைச்சரான ரோபிரிடோ மரணம் அடைந்தது பிலிப்பைன்ஸ் அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார். சமூக சீர்திருத்தவாதியான ரோபிரிடோ கடந்த 2000ஆம் ஆண்டு மகசேசே விருது பெற்றார். மேலும் நோபல் பரிசுக்கும் இவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# எசெய்ப் கடாபி மீதான வழக்கின் விசாரணை விரைவில் ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்பு



லிபியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் செய்ப் அல் இஸ்லாம் மீது அடுத்த மாதம் விசாரணை தொடங்க உள்ளது.

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். அப்போது போராட்டக்காரர்களை கொல்வதற்கு இராணுவத்திற்கு உத்தரவு பிறப்பித்ததாக செய்ப் அல் இஸ்லாம் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த குற்றம் நிருபிக்கப்பட்டால் ஏழாண்டு சிறைத் தண்டனை கிடைக்கும் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது குறித்து லிபியாவின் வழக்கறிஞர் கூறுகையில், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் செய்ப்பின் வழக்கை விசாரிக்காது என்றும், லிபியா நீதிமன்றமே விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் என்றும் தெரிவித்தார். போராட்டக்காரர்களுடன் இணைந்து செயல்பட்டதற்காக லிபியாவின் பழைய அரசால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவரும், புதிய அரசாங்கத்தின் துணைத்தலைவருமான கியுமா அடிகா, இந்த விசாரணை மிக மிக முக்கியமானது. எங்களால் என்ன செய்ய முடியும் என்பதை இந்த உலகுக்கு நாங்கள் காட்டுவோம் என்றார். இந்த விசாரணையை மூன்று லிபிய நீதிபதிகள் நடத்துவர் என்றும், ஆறு மாத காலத்துக்குள் விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து வழக்கறிஞர் பாரா கூறுகையில், இது வரை செய்ப் தனக்காக வாதாட ஒரு வழக்கறிஞரை கூட நியமிக்கவில்லை. அவர் நியமிக்காவிட்டால் அரசு நியமிக்கும்.

சாட்சிகள் செய்ப்புக்கு எதிராக உள்ளது. மேலும் சாட்சியங்களில் மிக முக்கியமாக காணொளிக் காட்சிப் பதிவுகள், மக்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம், எழுத் தாவணங்கள், செய்ப் இராணுவத்திடம் பேசிய வீர முழக்கம் போன்றவை உள்ளன என்றும் தெரிவித்தார்.

## முட்டைகோஸ் சாப்பிட்ட 7 பேர் மரணம்

ஜப்பானில் முட்டைகோஸ் தொக்கு சாப்பிட்ட ஏழு பேர் மரணமடைந்துள்ளனர், நூற்றுக்கும் அதிகமானோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் முட்டைகோசால் செய்யப்படும் தொக்கு, ஜப்பானில் மிகவும் பிரபலமாகி இருந்தது. ஜப்பானில் உள்ள முதியவர்கள், இந்த முட்டைகோஸ் தொக்கை விரும்பி சாப்பிடுவார்கள்.

இந்நிலையில் ஹொகைடோ மாகாணத்தில், கெட்டுப்போன முட்டைகோஸ் தொக்கை சாப்பிட்ட ஏழு பேர் பலியாயினர். நூற்றுக்கும்




அதிகமானவர்கள் மருத்துவமனையில் சிகிக்சை பெற்று வருகின்றனர். போதிய அளவில் பதப்படுத்தாத காரணத்தால், முட்டைகோஸ் தொக்கு கெட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. விற்பனை செய்யபடாத முட்டைகோஸ் தொக்குகளை பொலிசார் பறி முதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கூடங்குள மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே ஒதுக்க வேண்டும்

## பிரதமருக்கு ஜெ. மூன்றாவது கடிதம்

கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே ஒதுக்க வேண்டும் என்று, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு முதல்வர் ஜெயலலிதா மீண்டும் கடிதம் எழுதியுள்ளார். முதல்வரின் இந்தக் கோரிக்கை ஏற்கப்படுமானால், மின் பற்றாக்குறையில் தவிக்கும் தமிழகத்திற்கு, ஓரளவு விடிவு ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்திய - ரஷ்ய கூட்டு ஒப்பந்தத்தில், திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தில், 1,000 மெகாவாற் மின் உற்பத்தி திறன் கொண்ட, இரண்டு அணு மின் உலைகளின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதில், முதலாவது அணு உலையில் மின் உற்பத்திக்கான அனைத்து முதற்கட்டப் பணிகளும் முடிந்து விட்டன. எரிபொருளான யுரேனியம் நிரப்புவதற்கு முன், டம்மி பியூல் எனப்படும் மாதிரி எரிபொருள் நிரப்பி, பின் அவற்றை அகற்றி, அனைத்து கட்ட சோதனைகளும் முடிந்து விட்டன. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதலாவது அணு உலையில், யுரேனியம் எரிபொருள் நிரப்ப, இந்திய அணு சக்தி ஒழுங்கு முறை ஆணையம், அனுமதியும் வழங்கியுள்ளது.



இதையடுத்து, கூடங்குளம் அணு மின் நிலையத்தில் முதலாவது அணு உலையில் யுரேனியம் எரிபொருள், அடுத்த சில நாட்களில் நிரப்பும் பணி துவக்கப்பட இருக்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே ஒதுக்க வேண்டும் என, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, முதல்வர் ஜெயலலிதா இரண்டு முறை கடிதம் எழுதியிருந்தார். இதையடுத்து, மீண்டும் அதை வலியுறுத்தும் வகையில் மூன்றாவது முறையாக நேற்று கடிதம் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: கூடங்குளம் அணு மின் நிலையத்தில், 1000 மெகாவாற் திறன் கொண்ட முதல் யூனிட்டில் இருந்து உற்பத்தி செய்யப்பட உள்ள மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே ஒதுக்க தாங்கள் உதவ வேண்டும் எனக் கோரி, மார்ச் 31 மற்றும் ஏப்ரல் 25 ஆகிய திகதிகளில் தங்களுக்கு நான் கடிதம் எழுதி இருந்ததை நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த கடி தங்களுக்கு தங்களிடம் இருந்து இதுவரை எவ்வித பதிலும் வரவில்லை. கூடங்குளம் அணு மின் நிலைய முதல் யூனிட்டில், அடுத்த சில தினங்களில் எரிபொருள் நிரப்பும் பணி துவங்க இருப்பதாக நான் அறிகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் என் முந்தைய வேண்டுகோளை தங்களுக்கு நினைவுபடுத்தி, விரைவான பதிலை எதிர்பார்க்கிறேன். இந்த விசயத்தில், தமிழகத்தின் நியாயமான கோரிக்கையை ஏற் பீர்கள் என்று நான் நம்புகிறேன். தங்களின் விரவான பதிலை எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில்முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் 108 கோடி ரூபாயில் புதிய சாலைகள்

தமிழ் நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரில் உள்ள 1,200 சாலைகள், 108 கோடி ரூபாயில் புதிதாக அமைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

இதற்கான பணிகள், செப்டம்பர் முதலாம் திகதி துவங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள சாலைகள், குறுகிய காலம் கூட தாக்குப் பிடிக்காமல் சேதமடைவதால், பிளாஸ்டிக் சாலைகளாக போடும் திட்டத்தை மாநகராட்சி அறிவித்தது.

இதன்படி இந்த ஆண்டுக்கு 1,200 சாலைகள், 108 கோடி ரூபாயில் போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மண்டல வாரயாக சாலைகள் குறித்த பட்டி குறித்து, மாநகராட்சி ஆணையர் கார்த்திகேயன் கூறும்போது 44 சிப்பங்களாக பிரித்து, 1,200 சாலைகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டது. இதில், 40 சிப்பங்களில் இறுதி செய்யப்பட்டுள்ளன. இதில், 956 சாலைகளுக்கு ஒப்பந்தாரர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்த வார மன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று, பணி ஆணை உடனே வழங்கப்படும். செப்டம்பர் முதலாம் திகதி முதல் சாலைப் பணி துவங்கும், என்றார். விடுபட்ட நான்கு சிப்பங்களில், 241 சாலைகள் உள்ளன.

இதற்கு மறு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இதையும் வேகப்படுத்தி உடனே பணிகள் துவக்கப்படும் எனவும், சாலைகள் அனைத்தும், பிளாஸ்டிக் கலந்த தார் சாலைகளாகவே போடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக, மாதவரம் மண்டலத்தில், 211 சாலைகளும், வளசரவாக்கம் மண்டலத்தில், 119 சாலைகளும் போடப்படவுள்ளன.

# அரச மருத்துவமனைகளில் மர்மமான முறையில் மரணமடையும் குழந்தைகள்

திருப்பதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தைகளில் மேலும், மூன்று குழந்தைகள் இறந்துள்ளனர்.

திருப்பதி அரசு மருத்துவமனை, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த, 200 குழந்தைகளில் கடந்த புதனன்று ஒரே நாளில், 11 குழந்தைகள் பல்வேறு நோய் காரணமாக இறந்தன.

குழந்தைகளுக்கு அவசர சிகிச்சையின் போது, சுவாசிப்பதற்கான ஒக்சிசன் பற்றாக்குறையால் உயிர் பலி ஏற்பட்டிருக்கலாம் என, மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்திருக்கிறது.

இச்சம்பவம் குறித்து, ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி, விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில், இம்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தைகளில் மேலும் மூன்று குழந்தைகள், நோயின் தீவிர தன்மை காரணமாக, இறந்து விட்டதாக, மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் வீராசாமி தெரிவித்துள்ளார்.

# கீதிகா சர்மா தற்கொலை வழக்கு மாஜி அமைச்சரிடம் விசாரணை

விமானப் பணிப்பெண் கீதிகா சர்மா தற்கொலை செய்து கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மாஜி அமைச்சர் கண்டாவிடம் விசாரணை தொடங்கியுள்ளது.

அரியானா மாநில உள்துறை அமைச்சராக இருந்த கோபால் கண்டாவின் விமான நிறுவனத்தில் பணிப் பெண்ணாக கீதிகா பணியாற்றி வந்தார்.



இந்நிலையில் கடந்த 5ஆம் திகதி அவர் தற்கொலை செய்து கொண்டார். அதற்கு முன்னதாக அவர் எழுதிய கடிதத்தில் என் மரணத்திற்கு காரணம் அமைச்சர் கோபால் கண்டாதான் என குறிப்பிட்டிருந்தார்.


இதையடுத்து தலைமறைவான கண்டா, நேற்று முன்தினம் அசோக் விஹார் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

இந்நிலையில் கோபால் கண்டாவிடம் பொலிஸார் விசாரணையை தொடங்கியுள்ளனர். தற்கொலைக்கு தூண்டியது, சாட்சியங்களை அழித்தது உள்ளிட்ட பிரிவுகளில் அவரின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது கண்டாவின் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ள பொலிஸார், அவரின் அலுவலகத்திற்கு சென்று ஆய்வு நடத்த உள்ளனர்.

# இந்திய செய்திகள்

# வதந்திகளுக்கு பாகிஸ்தான் இணையதளங்களே காரணம்

ஆர்.கே.சிங்




பாகிஸ்தானைச் சேர்ந்த 76 இணையதளங்கள் வதந்திகளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டன என்று மத்திய உள்துறை செயலர் ஆர்.கே.சிங் குற்றம்சாட்டியுள்ளார்.

புயலிலும் நிலநடுக்கத்திலும் உயிரிழந்தவர்களின் படங்களை மியான்மர் கலவரத்தில் இறந்தவர்கள் போல அந்த இணையதளங்கள் உணர்ச்சிகரமாகச் சித்திரித்து இந்த வேலையில் ஈடுபட்டுள்ளது.

இப்போது அந்த இணையதளங்கள் அனைத்தையும் மத்திய அரசு முடக்கியுள்ளது. அவை தவிர மேலும் 34 இணையதளங்களை முடக்குவதற்கான நடவடிக்கையில் மத்திய அரசு தீவிரமாக செயற்பட்டு வருகிறது.

இதற்கிடையே வதந்தி குறுஞ்செய்திகளை 100க்கும் மேற்பட்டவர்களுக்கு அனுப்பியதற்காக கோயம்புத்தூரைச் சேர்ந்த உசேன் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரிடம் இது குறித்த விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



லவ்டேல் காந்திபேட்டையில் ஊட்டியின் புகைப்படக் கலைஞர்கள் சார்பில், தாவரவியல் பூங்கா சாலையில், உலகப் புகைப்பட தினம் கொண்டாடப்பட்டது.

# மெகந்தியால் வந்த வதந்தியால் ரமழானன்று தமிழகத்தில் பரபரப்பு

ரமழான் நாள் கொண்டாட தயராகி கொண்டிருந்த நேரத்தில் பெண்கள் மெகந்தி வைத்ததால், உடல் நலக்குறைவு ஏற்படுவதாக உருவான வதந்தியை தொடர்ந்து தமிழகம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பகுதியில் ரமழான் பண்டிகையை முன்னிட்டு பெண்கள் தங்கள் கைகளை அழகுபடுத்த கடைகளில் விற்கப்படும் மெகந்தியை (கோன்) வாங்கி அலங்காரம் செய்தனர்

இதை பயன்படுத்திய சிலருக்கு கைகளில் அலர்ஜி, மயக்கம் ஏற்படுவதாக இரவில் தகவல் பரவியது. இதையடுத்து நள்ளிரவு இரவு 2 மணி அளவில் சொரத்தூர் மற்றும் அப்பம்பட்டை சேர்ந்த யாஸ்மீன் (வயது9), ஷமீம் (வயது15), தில்ஷாத் (வயது 25), ரஜீமா (40) அஷ்ரத் (12) ஆகியோர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தனர். இதில் அஷ்ரத்துக்கு மயக்கம், தலைவலி இருந்ததால் செஞ்சியில் இருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம் பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு அனுப்பினர். இத்தகவல் செஞ்சி பகுதியில் உள்ள முஸ்லிம்கள் மத்தியில் கைபேசி மூலம் வேகமாக பரவியது.

இதையடுத்து நேற்று அதிகாலை 4.30 மணிவரை 123 பேர் மெகந்தி பாதிப்பு ஏற்பட்டதாக சிகிச்சைக்கு வந்தனர். இதனால் செஞ்சி மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# மாணவியிடம் சில்மிசம் செய்த ஆசிரியர் கைது

போச்சம்பள்ளியில், பள்ளி மாணவியிடம் சில்மிஷம் செய்த ஆசிரியரை, பொலிசார் கைது செய்தனர். யாத்ரா, 15 (பெயர் மாற்றப்பட்டுள்ளது). இவர், போச்சம்பள்ளி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வந்தார்.

இதே பள்ளியில் ஊத்தங்கரை துரிச்சிப்பட்டியைச் சேர்ந்த மோகன், 35, என்பவர் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார். நேற்றுமுன்தினம் பள்ளியில் இளம் வயது தடுப்பு விழிப்புணர்வு குறும்படம், பள்ளி மாணவியருக்கு காட்டப்பட்டுள்ளது. அப்போது, ஒன்பதாம் வகுப்பு மாணவியர் சிலர் அந்த குறும்படத்தை பார்க்கச் செல்லா மல் வகுப்பறையில் அமர்ந்திருந்தனர். அங்கு வந்த ஆசிரியர் மோகன், யாத்ராவை தனியாக அழைத்து அவரிடம் பேசுவது போல் சில்மிஷம் செய்துள்ளார்.

மாணவி கூச்சல் போட்டதால் அதிர்ச்சியடைந்த மோகன் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார். இதனையடுத்து பெற்றோர், போச்சம்பள்ளி பொலிசில் புகார் செய்தனர்.

தீவிர விசாரணைக்கு பிறகு பொலிசார், மாணவியிடம் சில்மிஷம் செய்த ஆசிரியர் மோகனை கைது செய்தனர்.

# தேர்வாளர்களின் நெருக்கடியினாலேயே லக்ஷ்மன் ஓய்வு?

இந்திய கிரிக்கெட் சபை மற்றும் தேர்வாளர்கள் கொடுத்த நெருக்கடி காரணமாகவே, லக்ஷ்மன் திடீரென ஓய்வு அறிவித்தார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்திய டெஸ்ட் அணியின் நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர் லக்ஷ்மன்(37). 134 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 17 சதம், 56 அரை சதம் உட்பட 8781 ஓட்டங்களை எடுத்துள்ளார். கடந்த 16 ஆண்டுகளாக கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று வந்தார்.

பொதுவாக இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியவர் . கடந்த ஆண்டு இந்த இரு அணிகளுக்கு எதிராக சொதப்பியதால், இவர் ஓய்வு பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், "நான் அவ்வளவு எளிதில் விலக மாட்டேன். ஓய்வுக்கு முன் பெரியளவில் சாதித்து விட்டுத் தான் செல்வேன், என, நெருங்கிய நண்பர்களிடம் கூறினாராம். அதுதவிர, நியூசிலாந்து தொடருக்காக, கடந்த சில மாதங்களாக பெங்களூர் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வந்ததுடன் எதிர்வரும், நவ., 15 முதல் டிச., 17 வரை இங்கிலாந்து மற்றும் 2013 இல் (பிப்.,-மார்ச்) அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சொந்த மண்ணில் நடக்கும் தலா 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், சாதிக்க காத்திருந்தார்.

ஆனால், நியூசிலாந்து டெஸ்ட் தொடரில் இடம் பெற்ற லக்ஷ்மன் இத்தொடருடன் ஓய்வு பெறப் போகிறார் என செய்திகள் வெளியாகின. இந்நிலையில், நேற்று முன்தினம் திடீரென, அவர் ஓய்வு பெறுவதாக அறிவித்து, எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

கடந்த சில வாரங்களாக நடந்த செயல்கள் தான், லக்ஷ்மனை இம்முடிவு எடுக்கத் தூண்டியதாக தெரிகிறது. நியூசிலாந்து தொடரில் இடம் பெற்ற பொழுதும் ஒரு போட்டியிலும் பங்குபெற்றாமல், லக்ஷ்மன் ஓய்வு பெற்றது, இந்திய கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ.,) அதிர்ச்சிதந்துள்ளது.

**காரணம் என்ன:**

இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத பி.சி.சி.ஐ., நிர்வாகி ஒருவர் கூறுகையில், "பி.சி.சி.ஐ., யில் இருந்து லக்ஷ்மனுக்கு யாரும் நெருக்கடி தரவில்லை: இந்நிலையில் ஏன் ஓய்வு பெற்றார் எனத்தெரியவில்லை. லக்ஷ்மன் விடயத்தில் ஏதோ நடந்துள்ளது. ஒருவேளை, இவரது "போர்ம்" குறித்து, முன்னாள் வீரர்கள் தெரிவித்த கருத்துக்கள், அவரை காயப்படுத்தி இருக்கலாம், என்றார்.

மற்றொரு நிர்வாகி கூறுகையில், "தேர்வாளர்கள் அவரை நியூசிலாந்து தொடருக்கு தேர்வு செய்தனர். அப்படி இருந்தும் ஏன் விளையாடவில்லை என்பதை அவர் தான் தெரிவிக்க வேண்டும், என்றார்.

**நானே போகிறேன்:**

நியூசிலாந்து தொடருக்கு லக்ஷ்மனை தேர்வு செய்த பின், இவரை தொடர்பு கொண்ட தேர்வாளர் ஒருவர், "இத்தொடர் தான் உங்களுக்கு கடைசி" என, தெரிவித்துள்ளார். இது லக்ஷ்மனை மிகவும் காயப்படுத்தி விட்டதாக தெரிகிறது.

இதையடுத்து தேர்வாளர்களுக்கு பதிலடி கொடுக்க நினைத்த லக்ஷ்மன், "நீங்கள் என்ன என்னை ஓய்வு பெறச் சொல்வது, நானே ஓய்வு பெறுகிறேன், என்று, உடனடியாக ஓய்வை அறிவித்தார் என்றும் கூறப்படுகிறது.

**பத்ரிநாத் தேர்வு**

லக்ஷ்மன் இடத்துக்கு தமிழகத்தின் பத்ரிநாத் தேர்வு செய்யப்பட்டார். 2010இல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்ற, பத்ரிநாத், முதல் தர போட்டிகளில் (சராசரி 60.74 ஓட்டங்கள்) துடுப்பாட்டத்தில் அசத்தியவர். இதுகுறித்து பி.சி.சி.ஐ., செயலர் சஞ்சய் ஜக்தலே கூறுகையில், "லக்ஷ்மனுக்குப் பதில் பத்ரிநாத்தை தேர்வுக்குழு தேர்வு செய்துள்ளது. இவர், வரும் 23ஆம் திகதி தொடங்கும் நியூசிலாந்து தொடரில் இடம்பெறுவார், என்றார்.

**டோனி வருத்தம்**

லக்ஷ்மன் கூறுகையில், "ஓய்வு முடிவை அணித்தலைவர் டோனியிடம் தெரிவிக்க முயன்றேன். ஆனால், அவரை தொடர்பு கொள்வது மிகவும் கடினமாக இருந்தது, என்றார். இந்நிலையில் லக்ஷ்மனின் முடிவு குறித்து டோனி கூறுகையில், "லக்ஷ்மன் போன்ற ஒரு வரை எனது வாழ்க்கையில் சந் தித்தது இல்லை. தனிப்பட்ட முறை யிலும், ஒட்டு மொத்த இந்திய அணிக்கும லக்ஷ்மன் ஓய்வு இழப்புதான்", என்றார்.

**மனைவி அதிர்ச்சி!**

லக்ஷ்மன் மனைவி சைலஜா கூறுகையில், "இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவை, நமது சொந்த மண்ணில் வீழ்த்த வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். நாங்களும் இத்தொடர்களை எதிர்பார்த்தோம். இந்நிலையில் திடீரென ஓய்வு அறிவித்தது பெரும் அதிர்ச்சி தான். அவருக்கு கிரிக்கெட்தான் அவரின் முதல் மனைவி.



# டேவிஸ் கிண்ணத் தொடர்: முன்னணி வீரர்கள் நீக்கம்

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் சிறப்பாக விளையாடாத ரென்னிஸ் வீரர்கள் மகேஷ் பூபதி மற்றும் போபண்ணாவை டேவிஸ் கிண்ணத் தொடரில் இருந்து நீக்க அகில இந்திய ரென்னிஸ் கழகம் (ஏ.ஐ.டி.ஏ) முடிவு செய்துள்ளது.

முன்னதாக ஒலிம்பிக் போட்டிக்குச் செல்லும் குழுவை ஏ.ஐ.டி.ஏ அறிவித்தபோது அதற்கு மகேஷ் பூபதி மற்றும் போபண்ணா மறுப்பு தெரிவித்து தங்களை ஆடவர் இரட்டையர் பிரிவுக்கு ஒன்றாக அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தினர். அப்போதே, ரென்னிஸ் வீரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏ.ஐ.டி.ஏ அறிவுறுத்தியது. எனினும், வீரர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களது விருப்பப்படி ஒலிம்பிக் போட்டிக்கு 2 அணிகளை அனுப்பியது.

இந்த நிலையில் நடைபெற உள்ள டேவிஸ் கிண்ணத்துக்கு இந்திய ரென்னிஸ் அணியை அறிவிக்க ஏ.ஐ.டி.ஏ நேற்று முன்தினம் கூடியது. கூட்டத்துக்குப் பின்னர், முன்னணி வீரர்களான பயஸ், பூபதி, போபண்ணா, சோம்தேவ் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை என்றும், இளம் வீரர்களான யுகி பாம்ப்ரி, விஷ்ணு வர்தன், சகேத் மைநேனி, சனம் சிங், ஸ்ரீராம் நாராயணன் ஆகியோர் இடம்பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

# இங்கிலாந்து பிறீமியர் லீக்: தொடக்கமே அதிர்ச்சி

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடர் நேற்று ஆரம்பித்த நிலையில் முதல் நாளிலேயே அதிர்ச்சியான முடிவு கிடைக்கப் பெற்றது. லிவர்பூல் அணி நேற்றைய தினம் தோல்வியடைந்தது.

நேற்று இடம்பெற்ற போட்டிகளில் லிவர்பூல் அணிக்கும், வெஸ்ட் ப்ரொம்விச் அணிக்குமிடையிலான போட்டியில் வெஸ்ட் ப்ரொம்விச் அல்பியன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இது முதல்நாளிலேயே பெறப்பட்ட அதிர்ச்சியான முடிவாக அமைந்து கொண்டது.

ஏனைய போட்டிகளில் ஆர்சனல் அணிக்கும், சண்டர்லாண்ட் அணிக்குமிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாமல் போட்டி சமநிலையில் நிறவடைந்திருந்தது. ஆர்சனல் அணியின் தலைவர் ரொபின் வான் பேர்சி மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்கு மாறிய பின்னர் இடம்பெற்ற முதலாவது போட்டியாக இது அமைந்திருந்தது.


நோர்விச் அணிக்கெதிரான போட்டியை ஃபுல்ஹாம் அணி 5-0 என்ற கணக்கிலும், குயீன்ஸ் பார்க் கழகத்திற்கும் ஸ்வன்ஸி கழகத்திற்குமிடையிலான போட்டியில் ஸ்வன்ஸி கழகம் 5-0 என்ற கணக்கிலும், றீடிங் கழக்த்திற்கும், ஸ்ரோக் கழகத்திற்குமிடையிலான போட்டி 1-1 என்ற கணக்கிலும், வெஸ்ட் ஹாம் அணிக்கெதிரான போட்டியில் அஸ்டன் வில்லா கழகம் 0-1 என்ற கணக்கிலும் தோல்வியடைந்திருந்தது.

நியூ காசில் கழகத்திற்கும், ரொட்டென்ஹாம் அணிகளுக்கிடையிலான போட்டியில் நியூகாசில் அணி 2-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றிருந்தது.

# லக்ஷ்மனின் ஓய்வுக்கு தேர்வாளர்களே காரணம் சாடுகிறார் கங்குலி

இந்திய கிரிக்கெட் அணியின் சீனியர் வீரரான லக்ஷ்மன் தனது சொந்த மண்ணில் டெஸ்ட் போட்டியில் கூட விளையாடாமல் ஓய்வு முடிவை அறிவித்துள்ளார். இது திடீரென சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கங்குலி அளித்த பேட்டியில் லக்ஷ்மன் போன்ற வீரர்கள் கடின பயிற்சியை மேற்கொள்ள முடியாது. விளையாடுவதற்கு போதிய உடல்தகுதி இருந்தாலே விட்டு விட வேண்டும். ஸ்ரீகாந்தை அணுகுவதே பெரிய பிரச்னையாக



இருக்கிறது. தேர்வு குழுவினர் தங்கள் முடிவை முன்னரே லக்ஷ்மனிடம் தெரிவித்திருக்கலாம்.

# கைதடி மின்னொளியின் கரப்பந்தாட்டம் தென்மராட்சி மத்திய வி.கழகம் சம்பியன்

வலிகாமம்

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகங்களுகும் உள்ளூர் விளையாட்டுக் கழகங்களுக்கும் இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தென்மராட்சி மத்தி விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மின்னொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கைதடி மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் தென்மராட்சி மத்தி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் ஆட்ட நிறைவில் தென்மராட்சி மத்திய விளையாட்டுக் கழகம் கடும் போட்டியின் பின் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனைக் கைப்பற்றியது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை தென்மராட்சி மத்திய விளையாட்டுக்கழகம் 25:19, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாம் சுற்றை மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் 25:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

நான்காம் சுற்றை எந்த அணி வெற்றி பெறும் என இரு அணிகளின் ஆதரவாளர்களும் எதிர்பார்த்திருந்த நிலையில் கடும் போட்டியின் பின்னர் தென்மராட்சி மத்திய விளையாட்டுக்கழகம் 27:25 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

# விளையாட்டு உபகரணங்கள் தர மறுப்பு - வீரர்கள் பயன்படுத்த எந்தத் தடையுமில்லை:

## - மாநகர சபை விளையாட்டுத்துறை அதிகாரி

வலிகாமம்

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் உள்ள பளுதூக்கும் உபகரணங்களைப் பயன்படுத்த வீர்களை அனுமதிக்காத நிலைமை காணப்படுவதாக பளுதூக்கும் வீரர்கள் தெரிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கட்டுப்பாட்டில் உள்ள துரையப்பா விளையாட்டரங்கில் பளுதூக்கும் வீரர்கள் பயிற்சிகளை பெறுவதற்கான பளுத்தூக்கும் உபகரணங்கள் கொள்வனவு செய்து வீரர்களின் பயன்பாட்டிற்க்கென வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறச்செல்லும் வீரர்கள் இதற்க்கு சந்தாப் பணமாக 300 ரூபா பணம் செலுத்தி அங்கத்துவத்தையும் பெற்றுள்ளார்கள்.

உரிய கட்டணத்தை வீரர்கள் செலுத்திய பின்னரும் கூட பயிற்சிபெற அனுமதிக்கப்படவில்லை என்றும், இதனால் தாம் பயிற்சிகளை பெறமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தேசியமட்டப் போட்டிகளிலும் பாடசாலை மற்றும் திறந்த போட்டிகளிலும் கலந்து கொள்ள முடியாத நிலையில் தாம் உள்ளதாகவும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபை உரிய நடவடிக்கைகளை மேற்க்கொண்டு உபகரணங்களை உடன் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் எனவும் வீரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனினும் இது தொடர்பாக யாழ் மாநகர சபையின் விளையாட்டுப் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரியிடம் தொடர்பு கொண்டோம் அவர் இச் செய்தியினை முற்று முழுதாக மறுத்தார் மேலும் துரையப்பா விளையாட்டு அரங்கில் தற்போது போதியளவான உபகரணங்கள் இல்லாத காரணத்தினால் சகலரும் கட்டுப்பாடு இன்றி விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்துவதற்க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

# என்னை வெற்றி கொண்டவர் லக்ஷ்மனே - முரளி

ஓய்வுபெற்ற இந்திய அணியின் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ். லக்ஷ்மனின் ஓய்வு தொடர்பாக வருத்தமடைவதாகவும், அவரது ஓய்வு தொடர்பாக ஆச்சரியமடைவதாகவும் இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், உலக சாதனையாளருமான முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

வி.வி.எஸ்.லக்ஷ்மன் இந்தியாவைச் சேர்ந்த மிகச்சிறந்த வீரர்களில் ஒருவர் எனத் தெரிவித்த முத்தையா முரளிதரன், சுழற்பந்து வீச்சை மிகச்சிறப்பாக ஆடும் வீரர்களில் உலகில் வி.வி.எஸ். லக்ஷ்மன் முக்கியமானவர் எனத் தெரிவித்தார். லக்ஷ்மனுக்கெதிராக அதிகமான தடவைகள் விளையாடிய போதிலும், பெரும்பாலான தருணங்களில் லக்ஷ்மனே தன்னை வெற்றிகொண்டதாக தெரிவித்தார்.



நியூசிலாந்திற்கெதிரான தொடரில் பங்குபற்றுவார் என எதிர்பார்த்ததாகத் தெரிவித்த முரளிதரனுக்கு அவரது ஓய்வு தனக்கு ஆச்சரியமளிப்பதாகத் தெரிவித்தார்.

எனினும் ஓய்வெடுப்பதற் கான முடிவை அவர் மேற்கொண்டுள்ளதைமதிக்க வேண்டும்,

மிகுந்த நல்ல கருத்துக்களைகயும் சிறந்த நகைச்சுவை உணர்வு கொண்டவர் லக்ஷ்மன் எனவும் முரளிதரன் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 21.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது